விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com


சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 16 புதன்கிழமை (30.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 162

**தரம் - 5**
புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலால் சிங்கள மக்கள் சீற்றமடைந்துள்ளனர்

## வாராந்த கேள்வி பதிலில் முதல்வர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்) முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வால் சிங்கள மக்கள் கடும் சீற்றமடைந்துள்ளதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வாராந்த கேள்வி பதிலின் போது தெரிவித்துள்ளார். மேலும் நாங்கள் முதலில் இருந்தே எமது கொள்கைகளுக்கு விசுவாசமாக நடந்து கொண்டிருந்தோமானால், உண்மையாக உரிமை கோருபவரை சிங்கள மக்கள் இந்தளவுக்கு வெறுத்திருக்கமாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (10-ம் பக்கம் பார்க்க...)



போராட்டம் நடத்தியவர்களுக்கு

### புலனாய்வாளர்கள் கொலை அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)
கடலட்டை வாடிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் போராட்டம் நடத்தியவர்களுக்கு கடற்படை புலனாய்வாளர்களால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. 23

20 ஆயிரம் பட்டதாரிகளுக்கு

### ஜுலை 2இல் அரச நியமனம்

(கொழும்பு)
அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் எதிர்வரும் ஜுலை மாதம் 2-ம் திகதி தொடக்கம் 20 ஆயிரம் பட்டதாரிகளை 23

### டிப்பர் - முச்சக்கரவண்டியுடன் நேருக்கு நேர் மோதி விபத்து

முல்லைத்தீவு ஏ35 வீதியில் சம்பவம்; முச்சக்கரவண்டி சாரதி ஸ்தலத்தில் பலி



(கண்டாவளை)
கிளிநொச்சி-பரந்தன்-முல்லைத்தீவு ஏ35வீதியின் சுண்டிக்குளம் சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று பிற்பகல் டிப்பர் வாகனமும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதியதில் முச்சக்கர 24

### உலகசந்தையில் எரிபொருளின் விலை வீழ்ச்சி

(கொழும்பு)
உலக சந்தையில் எரிபொருள் விலை குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் நேற்று அறிவித்துள்ளன.
ஒரு பீபாய் எண்ணெயின் விலை அமெரிக்க டொலர் 1.12 இனால் (180 ரூபாயினால்) குறைந்துள்ளது.(ம)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில்

### போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தனிடம் புலனாய்வு விசாரணை

(யாழ்ப்பாணம்)
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாடுகள் தொடர்பாக ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தனிடம் நான்காம் மாடியில் வைத்து 5 மணித்தியாலங்கள் வரையில் பயங்கரவாத புலனாய்வு பிரிவு பொலிஸார் தொடர் 23

### கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனை 4-ம் மாடிக்கு விசாரணைக்கு அழைப்பு

மொட்டைக் கடித அழைப்பால் அவர் அதை ஏற்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனை பயங் 23

# மைத்திரி - ரணில் கூட்டு அரசில் ஊடகங்களுக்கு பாதுகாப்பில்லை

கவலை வெளியிட்டார் மகிந்த

(கொழும்பு)
ஜனாதிபதி மைத்திரி - ரணில் கூட்டு அரசாங்கத்தின் ஆட்சியில் ஊடகங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்.
பெலிஅத்த பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் தற்போது நட 23



திருடர்களை பிடிப்போம் என்று

### ஜனாதிபதி, பிரதமர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை

(கொழும்பு)
கடந்த அரசாங்கத்தின் ஊழல்வாதிகளையும், திருடர்களையும் பிடிக்க தவறியமையால் இன்று வீரர்கள் திருடர்களாகவும், திருடர்கள் வீரர்களாகவும் மாறியுள்ளதாக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். 23

### மகிந்த - ரணில் எதிர்ப்பு அணி இன்று முக்கிய சந்திப்பு

மகிந்த ராஜபக்ஷ இன்று முக்கிய தீர்மானம் எடுக்கவுள்ளார்

(கொழும்பு)
அரசாங்கத்திலிருந்து அண்மையில் வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட ரணில் எதிர்ப்பு அணியுடன் இணைந்து எவ்வாறு பணியாற்றுவது என்பது குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று தீர்மானிக்கவுள்ளார்.
கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் 23

மன்னார் புதைகுழி மர்மம்

### தொடர்ச்சியாக வெளிவரும் மனித எலும்புக்கூடுகள்

அகழ்வுப்பணி இன்றும் தொடரும்

(மன்னார்)
மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாக மனித எலும்புகள் மீட்கும் பணிகள் நிறைவடைந்துள்ளது.
நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ் 23

### சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 27 பேர் கைது

(கொழும்பு)
கடற்பிரதேசங்களில் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட 27 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இவர்கள் அனைவரும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என கடற்படை இணையதளத்தில் குறிப்பிடப்பட்டு 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# குருநகர் தொடர்மாடி குடியிருப்பில் உள்ள கொட்டகைகளை அகற்ற கோரி

## குடியிருப்பாளர்கள் மாநகர சபை முதல்வரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடி குடியிருப்பு பகுதியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாநகர சபை முதல்வரிடம் தொடர்மாடி குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் குருநகர் தொடர்மாடியை அண்மித்த பகுதியில் பல சட்டவிரோத செயற்பாடுகளும் அத்துமீறல் செயற்பாடுகளும் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக தொடர்மாடி வளாகத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான பகுதியில், மரம் நாட்டுவதற்கென கட்டப்பட்ட தொட்டிகளை சுற்றி சில குழுக்கள் அடாவடித்தனமான முறையில் கொட்டகைகள் அமைத்துள்ளனர். அங்கு இரவு நேரங்களில் சட்டவிரோத செயற்பாடுகள் பல நடைபெற்று வருகிறது. மேலும் அப்பகுதியில் குழுக்களாக கூடி நின்று மதுபோதையில் குழுச் சண்டையில் ஈடுபடுவதால் மாடியில் உள்ள குடியிருப்பாளர்கள் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் இல்லையேல் மேலும் சில குழுக்கள் அப்பகுதியில் கொட்டகைகள் அமைப்பதற்கு தயாராகி வருகிறார்கள். இந்த சட்டவிரோத செயலை தடுத்து நிறுத்த மாநகர சபை நடவடிக்கை எடுக்காவிட்டால் அப்பகுதியில் பாரிய சமூக சீர்கேடு இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளது.

மேலும் அப்பகுதியில் ஆலயம், வைத்தியசாலை, முன்பள்ளி போன்ற பொது இடங்கள் அமைந்துள்ளன. எனவே பொதுமக்களின் நன்மையை கருத்தில் கொண்டு அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அத்துமீறிய கொட்டகைகளை உடனடியாக அகற்ற முன்வர வேண்டும் என மேலும் கேட்டுக்கொண்டுள்ளனர். இது தொடர்பான மகஜர் ஒன்றும் அண்மையில் மாநகரசபை முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ம-9)

## புஸ்பா செல்வநாயகம் காலமானார்



(யாழ்ப்பாணம்)

சிறந்த எழுத்தாளரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான செல்வி புஸ்பாவதி செல்வநாயகம் கடந்த 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவரின் இறுதிக் கிரியைகள் கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும். (ம)

## காற்றுடன் கூடிய காலநிலை நாளை வரை நீடிக்கும்

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றுடன் கூடிய நிலைமை நாளை வரை தொடர்ந்து காணப்படும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக் கூடும். மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் சிறிதளவு மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும்.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 50 கி.மீ வரையான ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும். (ம)

# செய்தியாளர் தாக்குதலை கண்டித்து யாழில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழில் இருந்து வெளியாகும் நாளிதழ் ஒன்றின் பிராந்திய செய்தியாளரும் பத்திரிகை விநியோகஸ்தருமான குடும்பஸ்தர் ஒருவர் மீது நேற்று முன்தினம் மேற்கொண்ட வாள்வெட்டு சம்பவத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த போராட்டத்தில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்புக்களும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-9)

# வளச்சுரண்டலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எதிர்ப்புப் போராட்டம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளச்சுரண்டலுக்கு எதிர்ப்பு தெரிவித்து மாபெரும் எதிர்ப்பு போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கு இளைஞர்களால் மேற்கொள்ளப்படவுள்ள இவ் எதிர்ப்பு போராட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மருதங்கேணி பிரதேச செயலக முன்றலில் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளச்சுரண்டல்களான கடலட்டை பிடித்தல், மணல் அகழ்தல் என்பவற்றை நிறுத்துமாறு கோரியும்.

கஞ்சா, கசிப்பு, வாள்வெட்டு கலாசாரத்தை ஒழிக்குமாறு கோரியுமே இப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இப் போராட்டத்திற்கு வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள இளைஞர்கள், பொதுமக்கள், பொது அமைப்புகள், அனைவரையும் ஆதரவு தரும்படி ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (ம-60)

IELTS
Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்
புதிய பிரிவு ஆரம்பம்
ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
(சு-2766)
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்
புதிய நடைமுறைகளுக்கு : www.itdmi.com/ls Hotline 0777 17 35 17
DMI COMPUTER EDUCATION
No.113, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
No. 19 A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655

## நல்லை மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி

### செந்தமிழ்ச்செல்வி புஷ்பாவதி செல்வநாயகம்



எமது வித்தியாலய மாணவ நலனோம்பில் அக்கறையும், கற்றல் அபிவிருத்தியில் ஆதரவும் அனுசரணையும் வழங்கி வந்த அன்னை செந்தமிழ்ச்செல்வி புஸ்பாவதி செல்வநாயகம் அவர்களின் பிரிவுத்துயரில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் (சு-2767)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 29 - 07 - 1926



மறைவு 30 - 04 - 2018

கடந்த 30.04.2018 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### சிற்றம்பலம் சிவக்கொழுந்து

திதி:பிரதமை


அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.05.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அத்தோடு எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேலுடையார் வீடு,
பெரியதோட்டம், கரவெட்டி மத்தி.

-குடும்பத்தினர் (C-2761)

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவசுப்பிரமணியம்



மறவன்புலோ மேற்கு, தோப்புப் பிள்ளையார் கோவிலைப் பிறப்பிடமாகவும் வீரசிங்கம் வீதி, கச்சாய் றோட், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவசுப்பிரமணியம் கடந்த (27.05.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா-செல்லமணி தம்பதிகளின் மருமகனும், இதிமலர் (வதனம்) இன் அன்புக் கணவரும், சுமந்திரன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ், பத்தைமேனி, அச்சுவேலி), யசிந்தா (பிரான்ஸ்), நேதாஜி (அதிபர்-யா/புதுமடம் றோ.க.த.க பாடசாலை), நிசாந்தன் (கனடா), றதிகாந் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரகுமாரி (அச்சுவேலி), தவநேசன் (பிரான்ஸ்), சர்மினி (தாதிய உத்தியோகத்தர்-யாழ்.போதனா வைத்தியசாலை), சர்மிளா (கனடா), நித்தியா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஆர்த்திகன், அபிசனன், மெலிகா, தவனுப்பிரியன், அஷிஷா, ஆதுர்ஷன், ஆருத், அஸ்னியா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, செல்வராசா மற்றும் புஸ்பராணியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் பாலசிங்கம், வசந்தாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2018) முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரசிங்கம் வீதி,
கச்சாய் றோட், சாவகச்சேரி. (4239)

தகவல்:-குடும்பத்தினர்
0775002107, 0033758419728

# நச்சு விதைகளை அகற்றுவோம் இனத்தின் அழிவைத் தடுப்போம்

## போதைப் பொருளுக்கு எதிராக நேற்று கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் பாவனையை முற்றாகத் தடை செய்யக்கோரி கவனயீர்ப்பு பேரணி ஒன்று நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

பரமேஸ்வரா சந்தியில் இருந்து ஆரம்பமாகிய இப் பேரணி திருநெல்வேலி சந்தி வரை வந்து நிறைவு செய்யப்பட்டது.

போருக்குபின்னரான காலப் பகுதியில் எமது பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இளையவர்கள் போதைக்கு அடிமையாகி தமது இளமையையும் வாழ்க்கையையும் அழித்து வருகிறார்கள். இது எமது இனத்தின் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சதி என்பதுடன் இதை வளர விடாது தடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு போதைப்பொருள்பாவனையை எதிர்க்க வேண்டும் என்ற நோக்குடன், போதைப்பொருள் பாவனையை வேரோடு அழிப்போம். நம் இனத்தின் மீது எறியப்பட்ட நச்சு விதைகளை அகற்றுவோம். எம் இனத்தின் அழிவைத்தடுப்போம் என்ற பதாகைகளை தாங்கியவாறு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பேரணியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (இ-9)

# டெங்கு குடம்பிகளின் தாக்கம் நாட்டில் சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில் டெங்கு குடம்பிகளின் பெருக்கம் சடுதியாக அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையினர் இதனை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் விரைவாக நுளம்பு ஒழிப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுக்காவிடின் அதன் பாதிப்பு கடுமையானதாக இருக்குமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் மே மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 647 பேர்டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இந்த வருடத்தின் இதுவரையிலுமான காலப்பகுதியில் 20 ஆயிரத்து 83 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர். (இ-7)

# தடைசெய்யப்பட்ட பொலித்தீன் வகைகள் இன்னும் விற்பனையில்

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட பொலித்தீன் வகைகள் இன்னும் வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் உரிய தரத்துடன் உற்பத்தி செய்யப்படும் உணவு பொதி செய்யும் பொலித்தீன் வகைகளுக்கு உரிய சந்தை வாய்ப்புகள் கிடைக்கவில்லை எனவும் அகில இலங்கை பொலித்தீன் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் தினத்தில் உரிய தரத்துடனான உணவு பொதி செய்யும் பொலித்தீன் உற்பத்தியில் இருந்து தாம் விலக தீர்மானித்துள்ளதாகவும் சங்கத்தின் செயலாளர் அநுர ஹேரத் தெரிவித்தார். (இ-7)

## நாட்டின் கடன் குறித்து

# போலியான தகவல்களை வெளியிடும் அரசிற்கு எதிராக நீதிமன்றில் மனு

## கூட்டு எதிரணி நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் கடன் குறித்து அரசாங்கம் போலியான தகவல்களை வெளியிட்டு வருகின்றது. இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளதுடன் தேசிய கடன் தொடர்பில் உண்மையான தரவுகளை பெறுவதற்கு நிதியமைச்சில் எழுத்து மூல கோரிக்கை ஒன்றினையும் விடுத்துள்ளதாக கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டு மாத்திரம் செலுத்த வேண்டிய மொத்த கடன் தொகையானது 2845 பில்லியன் ரூபாவாகும். இது அடுத்த வருடம் இரட்டிப்படையும் என நிதியமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளமையானது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

கடந்த அரசாங்கத்தை விட தேசிய அரசாங்கத்தின் மூன்று வருடகால நிர்வாகத்திலேயே மக்களின் வாழ்க்கை செலவுகள் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது.

நாளாந்தம் அனைத்து துறைகளிலும் உற்பத்தி விநியோக செலவுகள் உயர்வடைந்த நிலையில் உள்ளன.

இந் நிலையில் கடன்களை மீளச் செலுத்துவதற்காகவே அதிக வரிகள் அறவிடப்படுகின்றது என அரசாங்கம் குறிப்பிடுகின்றது. ஆனாலும் வெளிநாட்டு கடன்களை இதுவரை காலமும் மீள் செலுத்தவில்லை.

இந் நிலையில் தேசிய கடன் குறித்து அரசாங்கம் போலியான தகவல்களை வெளியிட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார் (இ-7)

# மலேசியாவின் மஹாதீர் அரசு போன்று இலங்கை அரசும் செயற்படவேண்டும்

## அமைச்சர் துமிந்தவின் விருப்பம் இது

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் மலேசியாவின் மஹாதீர் முகமட் அரசாங்கம் போன்று செயற்படவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் மலேசிய அரசாங்கம் போன்று செயற்பட்டிருந்தால் முன்னைய அரசாங்கத்தின் ஆட்சியில் ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

மலேசியாவின் முன்னைய அரசாங்கத்தின் ஊழல் சக்திகளை தண்டிக்குமாறு அந்த நாட்டு மக்கள் பிரதமர் மஹாதீரை கேட்டுக்கொண்டனர், அதன்படி அவர் பதவியேற்ற பின்னர் நடவடிக்கை எடுத்துள்ளார், ஊழலில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகள் அதிகாரிகளை கைதுசெய்துள்ளார் எனவும் துமிந்த திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.



எனினும் இலங்கையின் விசாரணையாளர்கள், அரசியல்வாதிகள் மற்றும் கோடீஸ்வரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்குகின்றனர் எனவும் அமைச்சர் விமர்சித்துள்ளார்.

சிறிய குற்றங்களில் ஈடுபட்ட சாதாரண பொதுமக்கள் விடயத்தில் இலங்கை அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்கின்றனர், சட்டத்தை அனைத்து மக்களுக்கும் ஒரே மாதிரியான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

# ஐ.ம.சு.முன்னணி மாகாணசபை உறுப்பினர்கள் சகலரும் மகிந்தவுடன் இணைய தீர்மானம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண சபை உறுப்பினர்கள் சகலரும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண சபை உறுப்பினர்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் கொழும்பு நெலும் மாவத்தை காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் ஏகமனதாக இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது. (இ-7)

# புகையிரத ஊழியர்களின் விடுமுறை மறு அறிவித்தல் வரை இரத்து

## போக்குவரத்து அமைச்சு நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

புகையிரத ஊழியர்களின் விடுமுறைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது. அதன்படி, புகையிரத சாரதிகள், புகையிரத காவலர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களின் விடுமுறைகளே இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சின் பிரதி அமைச்சர் அசோக் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு உட்பட 3 கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத தொழில்நுட்ப சேவை தொழிற்சங்கக் குழு நேற்று மாலை 4 மணி முதல் 48 மணிநேர அடையாள வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்திருந்தது. இந்நிலையில் போக்குவரத்து அமைச்சு இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வடக்கின் இளவரசன் யார்?

## அரையிறுதியில் நொதேன் வி.க



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் தனது 99ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர்களான சுப்பிரமணியம் கௌசிகன், இதயராஜ் ஞாபகார்த்தமாக நடத்தும் வடக்கின் இளவரசன் யார்? கிரிக்கெட் தொடரில் அரையிறுதிக்கு முன்னேறியது கல்வியங்காடு நொதேன் விளையாட்டுக்கழகம்.

அணிக்கு 7 பேர் 6 ஓவர்கள் கொண்ட மேற்படி கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று கல்வியங்காடு GPS மைதானத்தில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கல்வியங்காடு நொதேன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கல்வியங்காடு நொதேன் விளையாட்டுக்கழக அணித் தலைவர் பபீசன் (பட்பி) முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புத்தூர் ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் 6 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 51 ஓட்டங்களை எடுத்தது.


பந்துவீச்சில் கல்வியங்காடு நொதேன் வி.க சார்பில் விதுரசன் (அம்பாள்) 2, கீர்த்தனன், சாரங்கன் (ஸ்ரைலிஸ்), ஆனந்த் (அலாரம்) ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

52 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கல்வியங்காடு நொதேன் வி.கழகம் 5.4 ஓவர்களில் தனது வெற்றியிலக்கை அடைந்தது.

எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் கலைஒளி விளையாட்டுக்கழகத்தை நொதேன் எதிர்கொள்கிறது.

# சபாஷ் மரியா ஷரபோவா

## பிரெஞ் ஓபனில் அசத்தல்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு ஷரபோவா முன்னேறினார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடப்பு ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரான பிரெஞ்ச் ஓபன் நடக்கிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 'நடப்பு சம்பியன்' மற்றும் 'நம்பர் 1' வீரரான ஸ்பெயினின் நடால், இத்தாலியின் சிமோனா பலோலியை (129ஆவது இடம்) சந்தித்தார். நேற்று முன்தினம் மழையால் பாதிக்கப்பட்ட இப்போட்டியின் முதலிரண்டு செட்டை 6-4, 6-3 என நடால் வென்றிருந்தார்.

மழை தொடர்ந்ததால், மூன்றாவது செட் மட்டும் நேற்று நடந்தது. வழக்கம் போல சீறிய நடால் 7-6 என கைப்பற்றினார். முடிவில், நடால் 6-4, 6-3, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

**மரின் அசத்தல்**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் குரோஷியாவின் மரின் சிலிச் 6-3, 7-5, 7-5 என அவுஸ்திரேலியாவின் ஜேம்ஸ் டக்வொர்த்தை வீழ்த்தினார்.

ஸ்பெயினின் நட்சத்திர வீரரான டேவிட் பெரர் 6-3, 6-3, 6-7, 6-7, 6-7 என சக வீரரான முனாரிடம் வீழ்ந்தார்.

கனடாவின் 19 வயது வீரரான டேனிஷ் சபோவலோவ் 7-5, 6-4, 6-2 என அவுஸ்திரேலியாவின் ஜான் மில்மேனை தோற்கடித்தார்.

மற்ற போட்டிகளில் தென்னாபிரிக்காவின் கெவின் ஆண்டர்சன், இத்தாலியின் பேபியனா, உருகுவேயின் பாப்லோ உள்ளிட்டோர் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

**ஷரபோவா வெற்றி**


பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் ரஷ்யாவின் ஷரபோவா, நெர்தலாந்தின் ஹாகன்காம்ப்பை சந்தித்தார். முதல் செட்டை 6-1 என எளிதாக கைப்பற்றிய ஷரபோவா, அடுத்த செட்டை 4-6 என பறிகொடுத்தார். பின், சுதாகரித்த இவர் சரிவிலிருந்து மீண்டு வர, கடைசி செட் 6-3 என வசமானது. முடிவில், ஷரபோவா 6-1, 4-6, 6-3 என வெற்றி பெற்றார்.

ஸ்பெயினின் முகுருஜா 7-6, 6-2 என ரஷ்யாவின் கஸ்னட்சோவாவை தோற்கடித்தார். மற்றொரு முதல் சுற்றில் அமெரிக்காவின் பெதானிக் மடேக் 6-4, 6-3 என சுவீடனின ஜோகன்னாவை வீழ்த்தினார்.

மற்ற போட்டிகளில் ஆஸியின் சமந்தா ஸ்டோசர், பிரான்சின் புனோனா பெரோ வெற்றி பெற்றனர்.

# உலகக்கிண்ணத் தொடருடன் ஏபிடி ஓய்வுபெற்றிருக்க வேண்டும்

## தெ. ஆபிரிக்காவின் முன்னாள் தலைவர் ஸ்மித்



டி வில்லியர்ஸ் அடுத்த வருடம் இங்கிலாந்தில் நடைபெறும் உலகக் கிண்ணம் வரை விளையாடியிருக்க வேண்டும் என, அவருடன் இணைந்து விளையாடியவரும் தெ.ஆ. முன்னாள் அணித் தலைவருமான கிரேம் ஸ்மித் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்காவின் முன்னணி துடுப்பாட்ட வீரரான ஏபி டி வில்லியர்ஸ் கடந்த வாரம் திடீரென ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இந்த அறிவிப்பு அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. உலகக்கிண்ணத்தை கைப்பற்றுவதே தனது இலக்கு என்ற ஒரே நோக்கத்துடன் இருந்த டி வில்லியர்ஸ் உலககிண்ணத் தொடர் நடைபெறுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு ஓய்வு பெற்றது தென்னாபிரிக்காவிற்கு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் உலகக் கிண்ணத் தொடருக்குப் பின் டி வில்லியர்ஸ் ஓய்வு பெற்றிருக்க வேண்டும் என்று முன்னாள் தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரேம் ஸ்மித் கூறியுள்ளார்.

இதுகுறித்து கிரேம் ஸ்மித் கூறுகையில், "ஓய்வு குறித்து டி வில்லியர்ஸ் அதிக அளவில் யோசித்திருப்பார். உலகக் கிண்ணத்துக்கு பிறகு டி வில்லியர்ஸ் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். அவர் சிறிது காலம் விளையாடாமல் இருந்து அதன் பின் அணிக்கு திரும்பி இந்தியா, அவுஸ்திரேலியா தொடரின்போது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அதேபோல் ஐபிஎல் தொடரில் நன்றாக விளையாடினார்.

இப்படி ஒரு முடிவு எடுப்பார் என்று நான் நினைக்கவில்லை. உச்சகட்டமாக மக்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்திருப்பார்கள். அவர் ஒரு சிறப்பு வாய்ந்த துடுப்பாட்ட வீரர் என்பதால் மக்கள் அவரை மிஸ் செய்யப் போகிறார்கள். டி வில்லியர்ஸ் அதிக காலம் விளையாட வேண்டும் என்று மக்கள் விரும்பினார்கள்" என்றார்.

# நெய்மர் பயிற்சி; பிரேசில் மகிழ்ச்சி

சக வீரர்களுடன் நெய்மர் சிறப்பான வகையில் பயிற்சி மேற்கொண்டதால் பிரேசில் அணி மகிழ்ச்சியில் உள்ளது.

உலகின் தலைசிறந்த கால்பந்து வீரரும் பிரேசில் அணியின் தலைவருமான நெய்மர் பிரான்சின் லீக் 1 தொடரில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்காக விளையாடி வருகிறார்.

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நெய்மருக்கு காலில் காயம் ஏற்பட்டது. இதற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டதால் தற்போது வரை முன்னணி தொடரில் விளையாடவில்லை.

கடந்த வாரம்தான் உடற்தகுதி பெற்று போட்டிக்கு தயாரானார். இதனால் உலகக் கிண்ண போட்டிகளுக்கு தயாராகிவிடுவாரா? என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில் பிரேசில் அணி உலகக் கிண்ணத்துக்கான பயிற்சியை மேற்கொண்டு வந்தது.

இதில் நெய்மர் கலந்து கொண்டு பயிற்சி எடுத்தார். பிரேசில் அணியின் கடைசி பயிற்சி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் நெய்மர் கலந்து கொண்டு வேகமாக ஓடினார். காலால் பந்தை எளிதாக உதைத்தார்.

நெய்மர் உடற்தகுதி பெற்று பயிற்சி மேற்கொண்டது அந்த அணிக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யா உலகக் கிண்ணத் தொடரில் பிரேசில் 'ஈ' பிரிவில் இடம்பிடித்துள்ளது. பிரேசில் அணியுடன் சுவிட்சர்லாந்து, செர்பியா, கோஸ்டாரிகா அணிகளும் அக் குழுவில் உள்ளன.

# 'பிபா' கால்பந்து கவுண்டவுன் 15

## பாவ்லோ ரோசி இத்தாலியின் ராசி

பன்னிரண்டாவது உலகக்கிண்ண கால்பந்து தொடர் 1982இல் ஸ்பெயினில் மிகச் சிறப்பாக நடந்தது.

இந்த முறை 8 அணிகள் கூடுதலாக சேர்க்கப்பட, மொத்தம் 24 அணிகள் கலந்து கொண்டன. தகுதிச் சுற்றின் முடிவில் 12 ஆண்டுகளாக பங்கேற்காமல் இருந்த சோவியத் யூனியன், 1978 தொடரில் வாய்ப்பு கிடைக்காத யுகோஸ்லேவியா, அல்ஜீரியா, கமரூன், குவைத் போன்ற அணிகள் உலக கிண்ணத்தில் முதன்முறையாக பங்கேற்றன. ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் போட்டிகள் நடந்தன.

**சர்ச்சை பிரிவு**

இதில் 'குரூப்-1'ல் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. முதல் சுற்றில் 3 லீக் போட்டிகளையும் இத்தாலி 'சமன்' செய்ததால், கடும் விமர்சனத்தை சந்தித்தது.

பெருவுக்கு எதிரான லீக் போட்டியில், கமரூன் வீரர் அடித்த கோல் 'ஒப்சைட்' என மறுக்கப்பட்டது. ஆனால் 'ரிவி ரிப்ளேயில்' அது சரியென தெளிவாக தெரிந்தது. பின் கோல் எதுவுமின்றி போட்டி 'சமனில்லை' ஆக, கமரூன் அணி ஏமாற்றம் அடைந்தது. கோல்கள் அடிப்படையில் இத்தாலி அணி, அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.



**ரோசி எழுச்சி**

முதல் லீக் சுற்று போட்டிகளில் சொதப்பிய இத்தாலியின் பாவ்லோ ரோசி, இரண்டாவது லீக் சுற்று ஆட்டங்களில் எழுச்சி கண்டார். பிரேசிலுக்கு எதிரான போட்டியில் இவர், 'ஹட்ரிக்' கோல் அடித்து அணியை அரையிறுதிக்கு முன்னேறச் செய்தார்.

தவிர போலந்து, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ் அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறின.

முதல் அரையிறுதியில் 'இத்தாலி - போலந்து அணிகள் மோதின. இதில் பாவ்லோ ரோசியின் உதவியால் (2-0), இத்தாலி அணி நான்காவது முறையாக இறுதிக்கு முன்னேறியது. பிரான்சுக்கு எதிரான மற்றொரு பரபரப்பான அரையிறுதியில் மேற்கு ஜேர்மனி வென்றது.

**மூன்றாவது கிண்ணம்**

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இறுதிப் போட்டியில் இத்தாலி - மேற்கு ஜேர்மனி அணிகள் மோதின.

இதில் இத்தாலி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

44 ஆண்டுகளுக்கு பின், கிண்ணம் வென்ற இத்தாலி (1934, 1938, 1982) அணி, மூன்று முறை பட்டம் வென்ற பிரேசிலின் (1958, 1962, 1970) சாதனையை சமன் செய்தது. 'தங்கக்காலணி' மற்றும் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட 'கோல்டன் போல்' விருதை இத்தாலியின் பாவ்லோ ரோசி (6 கோல்) தட்டிச் சென்றார்.

# பொருட்களின் விலையுயர்வுக்கு எதிராக யாழில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம்









(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் பொருட்களின் விலை உயர்வு, வரிச்சுமை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த கண்டனப் போராட்டத்தில், கட்சியின் ஆதரவாளார்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு பொருட்களின் விலையேற்றத்துக்கு எதிராக கோசமிட்டதுடன், மக்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலைகள் நாளாந்தம் உயர்த்தப்பட்டு வந்து இன்று உச்சமாகி நிற்கின்றன.

இந் நிலையில் நாட்டின் ஏகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் உள்ளிட்ட உழைக்கும் மக்கள் பெரும் வாழ்க்கைச் செலவுச் சுமையால் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொள்கின்றனர். எனவே பொருட்களின் விலை அதிகரிப்பை உடன் நிறுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகள் வெற்றி கொள்ளப்படும் வரை போராட்டம் முன்னெடுக்கப்படும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-9)




# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

## நன்றி நவிலலும்

பிறப்பு: 30.07.1940
இறப்பு:2018.04.30

## அமரர். கந்தையா இரத்தினசிங்கம்

கடந்த 30.04.2018 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் கந்தையா இரத்தினசிங்கம் அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று 30.05.2018 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத் தருணம் தாங்களும் வருகை தந்து பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு
உடன் வந்து உதவி புரிந்தோருக்கும்
துயர் பகிர்ந்தோருக்கும் இறுதிச் சடங்கிலும்
இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டோருக்கும்
பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும்
எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புவி வாழ்ந்த புவிமகனே
கவியான கவிமகனே
மாதமொன்று மறைந்தோடி
இறைவனையும் நாள்தேடி
இரவு பகல் அழுது வாடி
புலரும் பொழுதையும் வெறுக்கிறோம்
புவி ஆடை புவி மகனே!
உங்கள் பிரிவால் தவிக்கிறோம்.
துயரின் துயர் அலைகளை
தினமும் தாக்கிச் சுமக்கிறோம்.

இல.74, கணேசபுரம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்
077 563 0713

(சி-2748)


**மீனம்**
எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும், பூர்விகச் சொத்துகளால் ஆதாயமுண்டு.

**மேடம்**
குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை, உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் கூடும் நாள்.

**இடபம்**
உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்**
உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்**
அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், வசதிவாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | சூரி. புத | சுக் |
| | இராசி பலன் | | ராகு |
| செவ். கேது | | | |
| சனி | சந் | குரு | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
கார்த்திகை
இரவு 3.42 மணிக்கு
தனு - சந்

**30.05.2018**

வைகாசி 16, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
பிரதமை முன்னிரவு 9.32 மணிவரை
கேட்டை பின்னிரவு 3.22 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை

வள்ளவன்

**கடகம்**
மற்றவர்களின் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்**
பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இலாபகரமான நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்**
சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொல்லை தந்தவர்கள் உதவ முன்வருவர், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு**
பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, சுபகாரியச் செலவுகள் கூடும்.

**விருச்சிகம்**
வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆழ்ந்த சிந்தையுண்டு, உறவினர் பகை அகலும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**துலாம்**
பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி**
மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாட்டில் முன்னேற்றமுண்டு, மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.



யாழ்ப்பாணம் -நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த்திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# மாம்பழம் சாப்பிட்ட சிறுமியை கடித்துக் குதறிய குரங்கு!

## சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

யாழ். சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் குரங்குக் கடிக்கு இலக்கான ஐந்து வயதுச் சிறுமியொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார். குறித்த சிறுமி முகத்தில் கடியுண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சிறுமி மாம்பழம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அதனைப் பறித்த போது குரங்கு முகத்தில் கடித்துள்ளது.

இந் நிலையில் குறித்த சிறுமி உடனடியாகச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதே பகுதியைச் சேர்ந்த வாகீசன் தஸ்மிதா என்ற சிறுமியே இவ்வாறு குரங்குக் கடிக்கு இலக்கானவராவார். (ம)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவில் கமக்காரர் அமைப்பின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் இன்று புதன்கிழமை கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். முரளிதரன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் கைதடி நுணாவில் கமக்காரர் அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)






இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட உயரதிகாரியான நா.கணேசராஜா நிர்மலகஜன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியன் முன்னிலையில் சமாதான நீதவானாக கடந்த 22ஆம்திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

# பொலிஸார் விசாரணைகளை துரிதப்படுத்தாமல் சந்தேகநபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது

## பொலிஸாரை எச்சரித்த நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸார் தமது விசாரணைகளை துரிதமாக விரிவுபடுத்தாமல் திரும்ப திரும்ப ஒரே விடயத்தை அறிக்கைகளாக நீதிமன்றுக்கு சமர்ப்பித்து சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது என யாழ்ப்பாணம் பொலிஸாரை எச்சரித்தார் யாழ். நீதிமன்ற மேலதிக நீதவான் திருமதி காயத்திரி சைலவன். அத்துடன் வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் சுமார் 75 நாட்கள் விளக்கமறியலில் இருந்த சந்தேக நபர்கள் இருவரை பிணையில் விடுத்து மன்று கட்டளையிட்டது.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள கட்டட பொருட்கள் விற்பனை நிலையம் மீது கடந்த மார்ச் 9 ஆம் திகதியன்று 10 மோட்டார் சைக்கிள்களில் வந்த இருபதுக்கும்மேற்பட்டவர்களை கொண்ட கும்பலொன்று விற்பனை நிலையம் மீதும் அதன் உரிமையாளர்கள் மீதும் தாக்குதலை நடத்தியது.

இந்தக் கும்பலின் தலைவர் என கருதப்பட்டவரின் பிறந்த நாளை கொக்குவில் சந்திப் பகுதியில் கேக் வெட்டி கொண்டாட முயன்றமையே இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு காரணமாக அமைந்தது.

சம்பவம் தொடர்பாக எட்டுப் பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் நால்வர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். நால்வர் தொடர்ச்சியாக நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேக நபர்கள் நால்வர் மன்றில் முற்படுத்தப்பட்டனர். பிணையில் விடுவிக்கப்பட்ட மேலும் நால்வர் மன்றில் முன்னிலையாகினர்.

அதன் போது சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், சந்தேக நபர்கள் தொடர்ச்சியாக விளக்கமறியலில் இருந்து வருவதால் அவர்களை பிணையில் விடுவிக்குமாறு கோரினர்.

அதற்கு ஆட்சேபனை தெரிவித்த பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கண்காணிப்பு கமராவின் காணொலிகள் அடங்கிய இறுவெட்டு பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் அது தொடர்பான அறிக்கை கிடைக்கும் வரை சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கோரினர்.

விளக்கமறியலில் வைப்பது சந்தேக நபரொருவருக்கு தண்டனையாக அமையாது. பொலிஸார் தமது விசாரணைகளை துரிதமாக விரிவுபடுத்தாமல் திரும்ப திரும்ப ஒரே விடயத்தை அறிக்கைகளாக நீதிமன்றுக்கு சமர்ப்பித்து சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது என மேலதிக நீதவான் திருமதி. காயத்திரி சைலவன் சுட்டிக் காட்டினார்.

இரண்டு சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்ய கட்டளை வழங்கிய மன்று ஏனைய இருவரை வரும் ஜூன் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (ம)

# வயாவிளான் தெற்கு ஞானவைரவருக்கு வைகாசி விசாகப் பொங்கல்–பழமடை

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய வைகாசி விசாக பொங்கல் மடை எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட மிகவும் பிரசித்தி பெற்ற இவ்வாலயத்தில் கடந்த சில வருட காலமாக படைத் தரப்பினரின் அனுமதியைப் பெற்று முக்கிய ஆலய விழாக்களை கொண்டாடி வருகின்றனர்.

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட கிராமங்கள் படிப்படியாக மீள் குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்டு வருகின்றன. படைத் தலைமையகம் மற்றும் பலாலி விமானத் தளத்தை அண்மித்த கிராமங்களான வயாவிளான், குரும்பசிட்டி, மயிலிட்டி, பலாலி, தையிட்டி, கட்டுவன், தென்மயிலை ஆகிய கிராமங்கள் பகுதியளவில் விடுவிக்கப்பட்டிருந்தாலும் கனிசமான பகுதிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

கடந்த 30.11.2017 ஆம் திகதியன்று வயாவிளான் றோ.க.பாடசாலை மற்றும் உத்தரியமாதா தேவாலயம் உட்பட்ட 29 ஏக்கர் குடியிருப்பிற்கான நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. எனினும் முக்கிய குடியிருப்பு பகுதி உட்பட ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், விளையாட்டு மைதானம், நெசவு சாலை, தபாற்கந்தோர் அடங்கலான பகுதி இன்னமும் விடுவிக்கப்படாமலே உள்ளது.

மீள் குடியேற்றத்தை வலியுறுத்தி வயாவிளான் மக்களும், பொது அமைப்புக்களும் பல உயர் மட்ட சந்திப்புக்களையும், தொடர் போராட்டங்களையும் நடத்தியிருந்தும் காணி விடுவிப்பு முழுமை பெறவில்லை. எனினும் தற்போதைய சுமுகமான சூழலில் மீதமுள்ள நிலப்பரப்பும் விடுவிக்கப்படும் என கிராம மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். யாழ். கட்டளைத் தளபதி வடபகுதி இந்து ஆலயங்களுடனான நெருக்கமான உறவைப்பேணி கணிசமான உதவிகளையும் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சாதகமான நிலையில் வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையினர் வைரவர் ஆலயத்தையும் விடுவிப்பதற்கான முயற்சியில் இறங்கியுள்ளனர்.

எதிர்வரும் 02.06.2018 சனிக்கிழமை நடைபெறவுள்ள வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய வைகாசி விசாக பொங்கல்மடை வழமை போன்று நடைபெறுமாதலால் பொங்கல் மற்றும் பழமடைக்கான பொருட்களுடன் வருகை தருவதுடன், வயாவிளான் மத்திய கல்லூரிக்கு அண்மித்துள்ள இராணுவ பிரதான நுழைவாயிலில் அன்றைய தினம் காலை 8 மணிக்கு ஒன்று கூடுமாறும் பரிபாலன சபையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ)



இணுவில் இந்துக்கல்லூரியின் முத்தமிழ்விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் கல்லூரியின் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன் வலிகாமம் கல்விவலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன் மற்றும் பாடசாலையின் பழைய மாணவரான ஐ.பரமேஸ்வரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.





சாவகச்சேரி சப்பச்சி மாவடிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ சப்பறத் திருவிழா கடந்த 27 ஆம் திகதியும் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் 28 ஆம் திகதியும் இடம்பெற்றது. (படங்கள்:- சுபேசன்)

# வலி.வடக்கில் புனித பிரதேசங்கள் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும்

## பிரதமரிடம் யாழில் எம்.பிக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பகுதியில் புனித பிரதேசங்கள் அமைந்துள்ள காணிகள் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணி விடுவிப்பு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாதுகாப்புப் படைத்தரப்பினர், அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலின் போதே இவ்வாறு மேற்குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பகுதிகளில் வரலாற்று பிரசித்தி பெற்ற பல புனித பிரதேசங்கள் தற்போதும் விடுவிக்கப்படாமல் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. அவற்றில் சில கோவில்களுக்கு இராணுவத்தினரின் அனுமதி எடுத்து விசேட நாட்களில் சென்று வழிபடவேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர்.

எனவே அப்பகுதிகளை முற்றுமுழுதாக விடுவிப்பதுடன் ஏனைய புனித பிரதேசங்களையும் மக்கள் எந்த நேரமும் சென்று வழிபடக்கூடியது போன்று விடுவிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பிரதமர். குறித்த புனித பிரதேசங்களை அடையாளப்படுத்தி அனுப்புமாறும் அது தொடர்பாக கொழும்பில் படைத்தரப்புடன் கலந்துரையாடி விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

அபிவிருத்தி தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் காங்கேசன்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை மாகாணசபையிடம் ஒப்படைக்க வேண்டுமென கோரிக்கை விடப்பட்டது. எனினும். அதை சுற்றுலா அமைச்சிடம் ஒப்படைத்து நட்சத்திர விடுதியாக்கவுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். (இ-9)


✦ வாழைக்குட்டிகள் விற்பனைக்குண்டு

✦ ஒரு வயதுக்கு மேற்பட்ட பெண் பொமேரியன் நாய்க்குட்டி தேவை.

தொடர்புகளுக்கு:- (4230)

077 172 6839



**தவறிவிட்டது**

முத்துக்குமார் மனோகர் ஆகிய எனது 552201493V எனும் எண்ணுடைய அடையாள அட்டை, கிளிநொச்சி HNB வங்கிப் புத்தகம், ATM அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கடந்த 26 ஆம் திகதி யாழ்.பேருந்து நிலையத்துக்கும் எதிரிலுள்ள ஸ்ரீநிகேதன் உணவகத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 807 8352 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு உதவவும். (4224)


# 20 ஆவது திருத்த விவகாரம் ஜே.வி.பியின் செயற்பாட்டில் சேமசிங்கவுக்கு சந்தேகமாம்

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக செயற்படும் மக்கள் விடுதலை முன்னணி தற்போது 20 ஆவது அரசியல் திருத்தத்தினை சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளமையானது பாரிய சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேம சிங்க தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரி விக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணியினர் சமர்ப்பித்துள்ள 20 ஆவது திருத்தமானது மக்களின் ஜனநாயக உரிமைகளை பறிக்கும் ஒரு முறைமையாக காணப்படுகிறது.

அதாவது மக்களி னால் தெரிவு செய்யப் படும் வேட பாளர் ஜனா திபதியாக பதவி வகிக் கலாம் என்ற முறைமை தற்போதைய அரசிய லமைப் பில் காணப் படுகின்றது. ஆனால் 20 ஆவது அரசிய லமைப் பில் இம்முறைமை இரத்து செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு பேரவையில் தேசிய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக செயற்படும் மக்கள் விடுதலை முன்னணி அங்கம் வகிக்கின்றது. இந் நிலையில் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த மூன்று வருட காலத்தின் பின் தற்போது மக்கள் விடுதலை முன்னணியினர் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளமையானது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது எனத் தெரிவித்தார். (இ-7)




Seminar on Technical Analysis

யாழ்ப்பாணம்

2nd June 2018

9:30 am onwards at CSE Jaffna Branch

Conducted by:
Mr. A. Visahan
Research Analyst
Asha Phillip Securities Ltd

Call or SMS 0777 822 014 / 0777 105 205

CSE COLOMBO STOCK EXCHANGE



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>அரச தொழில்<br>தொ.இ: B/7726 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி செவ் 2 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7889 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1ம் பாதம்<br>கி.பா: 5<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்:Master in civil eng.<br>பொறியியலாளர்<br>தொ.இ: B/7729 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம் செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: BSC<br>விரிவுரையாளர்<br>தொ.இ: G/7899 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 30 செவ் 12 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:A/L சுவிஸ்<br>தொ.இ: B/7731 | பிறப்பு: 1993 இந்து<br>கி.பா: 34செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7893 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7732 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7895 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## மன்னார் சதொச வளாகத்தில்

# இரண்டாவது நாளாகவும் இரு இடங்களில் அகழ்வுப்பணி




(மன்னார்)

மன்னார் சதொச நிலைய வளாகத்தில் இருந்து மனித எலும்புகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், குறித்த வளாகம் மற்றும் அகழ்வு செய்யப்பட்ட மண் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள இடம் ஆகிய இரு இடங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின.

சதொச விற்பனை நிலைய வளாகம் மற்றும் மன்னார் பொது மயானத்திற்கு பின் பகுதியில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த மண் ஆகியவற்றில் இரண்டாவது நாளாக ஒரே நேரத்தில் இரு அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின.

மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் ஆரம்பமான குறித்த அகழ்வுப் பணியின் போது விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர், களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான குழுவினர், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் சார்பாக சட்டத்தரணிகளான வி.எஸ்.நிறைஞ்சன், திருமதி ரணித்தா ஞானராஜ், விசேட தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்களங்களான வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மன்னார் நகர சபை, நில அளவைத் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள், தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டதோடு, சட்டத்தரணி பா.டெனிஸ்வரனும் கலந்து கொண்டிருந்தார்.

சதொச நிலைய வளாகத்தில் நேற்று அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற போது சந்தேகத்திற்கிடமான மனித எலும்புகள் மீட்கப்பட்டன.

மேலும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற போது நில மட்டத்தில் இருந்து சுமார் 7 அடி ஆழத்தில் மனித எச்சங்கள் பரவலாக காணப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் விசேட குழுவினர் தமது அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டபோது மனித எச்சங்கள் என சந்தேகிக்கும் பல்வேறு எலும்புத்துண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வளாகத்தில் இருந்து அகழ்வு செய்யப்பட்ட மண் மன்னார் பொது மயானத்திற்கு பின் பகுதியில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த மண்ணில் இருந்து அகழ்வுகள் இடம்பெற்றன.

இதன் போது சந்தேகத்திற்கிடமான மனித எலும்புகள், பற்கள் என்பன தொடர்ச்சியாக மீட்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)




# இன்புளுவென்சா வைரஸ் தொற்று சிறுவர்கள், கர்ப்பிணித்தாய்மார் கவனம்

## வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் அறிவுறுத்து

(பனிக்கன்குளம்)

**தென்னிலங்கையில் தற்போது அதிகரித்துக் காணப்படும் இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சல் தொற்று ஏற்பட்டு பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இத் தொற்று சிறுவர்களுக்கும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் ஏற்பட்டு வருகின்றது என பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. ஆதலால் வவுனியாவிலுள்ள சிறுவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கு.அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா மாவட்டத்தில் இன்புளுவென்சா வைரஸின் தாக்கம் தொடர்பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் இத்தாக்கம் இன்று வரையில் இனங்காணப்படவில்லை. தென்னிலங்கையில் அதிகரித்துக் காணப்படும் இன்புளுவென்சா வைரசினால் பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சிறுவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் இந்த தொற்று ஏற்பட்டு வருகின்றது. எனவே வவுனியா மாவட்டத்திலுள்ள சிறுவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை அணுகுமாறும் இதை எதிர்கொள்ள வைத்தியசாலை தயார் நிலையிலுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

# குடமுருட்டிக்குளத்தின் அணைக்கட்டு புனரமைக்கப்படாமையால் நீர் கசிந்து வெளியேற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்திற்குட்பட்ட பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களில ஒன்றான குடமுருட்டிக்குளத்தின் கீழ் ஆயிரத்து 100 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப் பரப்பில் 400 வரையான விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் குறித்த குளத்தின் வான் பகுதி மற்றும் அணைக்கட்டு ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் நீர்க் கசிவுகள் ஏற்பட்டு குளத்தில் இருந்து தினமும் நீர் வெளியேறுகின்றது.

இதனால் ஒவ்வொரு போகங்களிலும் தமது விவசாயச் செய்கைகள் பாதிக்கப்படுவதாகவும் குறித்த குளத்தின் அணைக்கட்டு மற்றும் வான் பகுதிகளை உயர்த்தி புனரமைப்பதன் மூலம் மேலதிகமாக இரண்டு அடி நீரைத்தேக்கி பயிர்ச்செய்கையின் நிலப்பரப்பை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ள விவசாயிகள் இதனைப் புனரமைத்துத் தருமாறு இதன் கீழ் உள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இதேவேளை, குறித்த குளத்தினை தற்போதைய நிலையில் அணைக்கட்டு மற்றும் வான் பகுதிகளை புனரமைப்பதற்கு 100 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளதுடன், குளத்தில் 400 அடி நீளமான வான் பகுதியை மட்டும் புனரமைப்பதற்கு 28 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டு அதற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் இந்தாண்டில் தற்போது குளத்தின் கீழான வாய்க்கால் வேலைகளை முன்னெடுப்பதற்கு ஐந்து மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அதன்மூலம் வாய்க்கால் வேலைகளை முன்னெடுக்கவிருப்பதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# படைப்பிரிவினர்களின் கண்காட்சி




(கண்டாவளை)

கிளிநொச்சி இராணுவத் தலைமையகத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான புதிய கண்டு பிடிப்புகள் கண்காட்சி நேற்றுக்காலை 9 மணியளவில் இரணைமடு நெலும்பியச மண்டபத்தில் இடம்பெற்றது.

இராணுவ தலைமையகத்தின் படைப் பிரிவினர்களின் புதிய கண்டு பிடிப்புகள் அன்றையதினம் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நிசங்க ரணவன கலந்து கொண்டதுடன், இராணுவ உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது 38 புதிய கண்டு பிடிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த கண்காட்சி நிகழ்வை பாடசாலை மாணவர்களும் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# தேர்த்திருவிழாவில் 12 பவுண் தங்க நகைகள் திருட்டு

(பனிக்கன்குளம்)

வவுனியா குருமன்காடு சந்தியிலுள்ள காளியம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது. இதன்போது பலரின் தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா குருமன்காட்டுச் சந்தியிலுள்ள காளி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதே நேரத்தில் அங்கு வந்த திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி தேர்த் திருவிழாவிற்கு வந்திருந்த 5 பேர் அணிந்திருந்த தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

தங்க நகைகளைப் பறிகொடுத்தவர்கள் ஆலய பரிபாலன சபையினரிடமும் தெரியப்படுத்தியும் நான்கு பவுண் தங்க நகையை பறிகொடுத்த பெண்மணி ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். 5 பேரின் தங்க நகைகளின் பெறுமதி 12 பவுண் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்திருட்டுத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# வாழ்வோம் வளம்பெறுவோம் செயற்றிட்டத்தில் இதுவரையில் 635 குடும்பங்கள் உள்ளீர்ப்பு

வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரனால் முன்னெடுக்கப்படும் வாழ்வோம் வளம்பெறுவோம் செயற்றிட்டத்தின் பதினெட்டாம் கட்டமானது அண்மையில் அவரது மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்றது.

புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்பில் முன்னெடுக்கப்படும் இச்செயற்றிட்டத்தின் பதினெட்டாங்கட்டத்தில் தாயகத்தைச்சேர்ந்த முப்பது குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இதுவரையில் அறுநூற்று முப்பத்து ஐந்து குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

செயற்றிட்டத்தின் 18 ஆவது கட்டத்தில் முப்பது குடும்பங்களிற்கு 500கிலோ அரிசியுடன் ஒருவருக்கு மூக்குக்கண்ணாடிக்காக 2ஆயிரம் ரூபாய் உதவித்தொகை மற்றும் ஒரு மாணவனுக்கான கற்றல் கருவிகளும் வழங்கப்பட்டன. (2)

# இலவங்குடாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இழுவைப்படகுகளில் இருந்து எண்ணெய் வெளியேற்றம்

## கடற்றொழிலாளர்கள் பாதிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் கிராஞ்சி இலவங்குடாப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற சுமார் 35 இற்கும் மேற்பட்ட இந்திய இழுவைப்படகுகளிலிருந்து வெளியேறும் எண்ணெய்க் கசிவுகளினால் கடல் வாழ் உயிரினங்கள் அழிவடைவதுடன், இந்தப்பகுதியில் தொழில் செய்ய வேண்டிய 45 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் கடற்றொழில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மன்னார், யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் கடற்பகுதிகளில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட சுமார்35 இற்கும்மேற்பட்ட இந்திய இழுவைப்படகுகள் பிடிக்கப்பட்டு குறித்த படகுகள் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக இலவங்குடா கடற்பகுதியில் நிறுத்தி வைக் கப்பட்டுள்ளன.

இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகுகளில் இருந்து வெளியேறுகின்ற எண்ணெய்க்கசிவுகள் குறித்த கடற்பகுதியில் பரவிக் காணப்படுவதால் அந்தப் பிரதேசத் தில் உள்ள கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் மீன்கள் தினமும் உயிரிழந்து வரு கின்றன. கடற்றொழிலாளர் இந்தப்பகுதியில் சிறகு வலை, இறால் மடி, நண்டுத் தொழில், தூண்டில் போன்ற பாரம்ப ரிய தொழில்களைச் செய்து வந்த 45 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் தொழில் களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்தப்பிரதேசத்தில் தொழில் செய்ய வேண்டிய கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த இந்திய இழுவைப் படகுகளை வேறு இடத்திற்கு மாற்றி தமது தொழிலுக்கு ஏற்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்து தருமாறு தாங்கள் பல்வேறு தரப்புக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பூநகரிப் பிரதேசத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்ட போது, இப்படகுகளை அகற்றித் தருவதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் மேற்படி கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

## கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக வீசப்பட்டுள்ள கடிதங்கள்



(கண்டாவளை)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கிளிநொச்சி விஜயத்தை அடுத்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக மக்களின் கோரிக்கை அடங்கிய கடிதங்கள் வீசப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் முன்பாக இவ்வாறு பல கடிதங்கள், வேலைவாய்ப்புக்காக வழங்கப்பட்ட சுய விபர கோவைகள் உள்ளடங்கலாக பல கடிதங்கள் இவ்வாறு பரவி வீசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315-312)

## தட்டுவன் கொட்டியிலுள்ள குடும்பங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் ஆரம்பிப்பு

(கண்டாவளை)

ஆனையிறவு கடல் நீர் ஏரியை அண்மித்த தட்டுவன் கொட்டியில் வாழுகின்ற 100 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் குடிநீர் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை பல வருடங்களாக எதிர்நோக்கி வந்தனர். கடந்த ஒன்பது ஆண்டுகளாக கரைச்சி பிரதேச சபை குடிநீர் விநியோகத்தை மேற்கொண்டு வந்தது.


எனினும் நிரந்தரமாக நீர் வழங்குவது குறித்து ஆராயப்பட்டது .இதனையடுத்து நீர் வளங்கள் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 4.5 மில்லியன் ரூபாய் செலவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனால் நாள் ஒன்றுக்கு 6 ஆயிரம் லீற்றர் நீரை இப்பகுதி மக்கள் பெறக்கூடியதாகவுள்ளது.

புதிய செயற்றிட்டங்களில் ஏற்படும் நிர்வாக செலவீனங்களுக்கு முதல் மாத நிர்வாக செலவீனங்களை பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பொறுப்பேற்றதுள்ளதுடன் பருவ மழை ஆரம்பிக்கப்படும் வரையிலான செயற்பாட்டு செலவீனங்களை கரைச்சி பிரதேச சபை பொறுப்பேற்கும் என கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

இந்த குடிநீர் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் தட்டுவன் கொட்டி பிரதேசத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

## 17 முதிரை மரக்குற்றிகளுடன் கப்ரக வாகனம் கைப்பற்று

### கல்லாறு சுண்டிக்குளம் வீதியில் சம்பவம்



(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது 17 முதிரை மரக்குற்றிகளை ஏற்றிப் பயணித்த கப்ரக வாகனமொன்றையும் முதிரை மரக்குற்றிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லாறு சுண்டிக்குளம் வீதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட குழுவினர் முன்னெடுத்த நடவடிக்கையின் போது, முதிரை மரக்குற்றிகளை ஏற்றிப் பயணித்த வெள்ளை நிற கப்ரக வாகனமொன்றை வழிமறித்தபோது, குறித்த வாகனத்தைச்செலுத்திச்சென்ற சாரதியும் மற்றுமொருவரும் வாகனத்தை கைவிட்டு தப்பியோடிய நிலையில் குறித்த வாகனத்தையும் பல இலட்சம் ரூபா பெறுமதியான 17 முதிரை மரக்குற்றிகளையும் கைப்பற்றி தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன் இதுதொடர்பான விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (2-315)





## வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் பயன்பாடற்று பாழடைந்த நிலையில்



(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் வடக்கு மாகாண சபையினால் சுமார் ஆறு மில்லியன் ரூபா செலவில் கடந்தாண்டு வடக்கு மாகாண முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மையம் பயன்பாடற்று பாழடைந்து காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இயற்கையான சூழலைக் கொண்டதும் சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடியதுமான ஓர் இடமாகக் காணப்படுகின்ற வன்னேரிக்குளம் பகுதியில் சுற்றுலா மையம் ஒன்று அமைத்து கடந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதாவது, வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் கீழ் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியில் மேற்படி சுற்றுலா மையம் கடந்தாண்டு மே மாதம் 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த சுற்றுலா நிலையத்திற்கு இதுவரை மின்சார இணைப்புக்கள் வழங்கப்படாத நிலையில் கட்டடத்தொகுதிக்கு பொருத்தப்பட்டிருந்த மின் இணைப்புக்கள் சேதமாக்கப்பட்டிருப்பதுடன், குறித்த சுற்றுலா மையத்தொகுதி எதுவித பராமரிப்புக்களுமின்றி எவரது பயன்பாட்டிற்கும் உட்படுத்தப்படாது பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது.

பெருந்தொகை நிதியில் கட்டப்பட்ட இவ்வாறான கட்டடம் எவ்வித பயன்பாடற்றும் பாழடைந்த நிலையில் காணப்படுவது பல்வேறு தரப்புக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (2-315)

## கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 515 ஏக்கர் நிலப்பரப்பளவு முப்படையினர் வசம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 40 வீதமான நிலப்பரப்பை படையினர் தம்வசம் வைத்திருப்பதனால் நகர அபிவிருத்தி மற்றும் ஏனைய அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு தடையாக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகரத்தின் மையப்பகுதியிலுள்ள பொதுத் தேவைகளுக்கென ஒதுக்கப்பட்ட 40வீதமான காணிகளை படையினர் ஆக்கிரமித்துள்ளதால் நகர அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாதுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தொழில் வாய்ப்புக்கள், வருமானங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுக்கக் கூடியதான நிலப்பரப்புக்களை படையினர் ஆக்கிரமித்துள்ளனர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவற்றை விடுவிப்பதன் மூலமே அபிவிருத்திகளை நோக்கிநகர முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


இதேவேளை கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் நேற்று முன்தினம் பிரதமர் ரனில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக்கூட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் 667 ஏக்கர் காணிகளும் கண்டாவளை பிரதேசத்தில் 185 ஏக்கர் காணிகளும் பூநகரிப் பிரதேசத்தில் 592.7 ஏக்கர் காணிகளும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் 71 ஏக்கர் காணிகள் உள்ளடங்கலாக ஆயிரத்து 515.7 ஏக்கர் அரச மற்றும் தனியார் காணிகள் இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்புப்படை மற்றும் பொலிஸார், கடற்படையினர் வசமிருப்பதாக மாவட்டச் செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)



ஜேர்மன் நாட்டில் உள்ள தாயக உறவுகளுக்கு உதவும் வகையில் செயற்பட்டு வரும் தமிழர் கலாசார வட்டம் (கயில் புறோன்) அமைப்பின் 80, ஆயிரம் ரூபா நிதியுதவியுடன் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு- மாங்குளத்தில் அமைந்துள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களின் உயிரிழை அமைப்பிற்கு ஒரு தொகை சமையல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந் நிகழ்வு அண்மையில் ஏ-9 வீதி மாங்குளத்தில் உள்ள உயிரிழை அமைப்பின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது. (2-15)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலால் சிங்களவர்கள் கொதிப்பு;

# வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனின் உயிருக்கு ஆபத்து!



**(யாழ்ப்பாணம்)**

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு தலைமைதாங்கிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீது சிங்களவர்கள் கடும் கோபத்தில் உள்ளதாகவும் அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வாரத்திற்கு ஒரு கேள்விக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் பதிலளித்து வருகிறார் அந்த வகையில் இந்தவாரம்.**

என்மேல் கரிசனையுடைய ஒருவர் பின்வரும் கேள்வியை அனுப்பியுள்ளார்.

**கேள்வி:-**ஐயா! உங்களைப் பற்றி தெற்கில் மிகக் கேவலமாகக் கதைக்கப்படுகிறது. பிரபாகரன் தலையில் கோடாலியால் வெட்டியதுபோல் உங்கள் தலையிலும் வெட்டவேண்டும் என்று கூறி உங்கள் வெட்டப்பட்ட தலையை வலைத்தளங்களில் படங்களாக அனுப்புகின்றார்கள். உங்கள் உயிருக்கு ஆபத்து வருமோ என்று பயப்படுகின்றோம். மேலதிக பாதுகாப்பைக் கோரிப் பெறமுடியாதா?

**பதில் -**உங்கள் அன்புக்கும் கரிசனைக்கும் என் மனமார்ந்த நன்றிகள்! எமது முள்ளிவாய்க்கால் நிகழ்வு இவ்வாறான ஆத்திரத்தை சில சிங்களவர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. அதன் அர்த்தம் என்னவென்றால் "உங்களின் அரசியல் பிரச்சினைகளை வெளிப்படுத்தாதீர்கள்! வெளிப்படுத்தினால் அடிப்போம், கொல்லுவோம், நாட்டைவிட்டுத் துரத்துவோம்"என்பதே. சிங்கள மக்களின் இவ்வாறான எதிர்மறைக் கருத்துக்களும் வன் நடவடிக்கைகளும் முன்னரும் வெளிவந்துள்ளன. "சிங்களம் மட்டும்"சட்டம் கொண்டு வந்தபோது எம்மைப் பயப்படுத்திப்பேசாது வைக்கப் பார்த்தார்கள்.

காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் இருந்த என் நண்பர் மௌசூர் மௌலானாவையும் வேறு சிலரையும் பேரைஏரிக்குள் (Beira Lake) அப்படியே தூக்கி வீசினார்கள். 58ஆம் ஆண்டுக் கலவரம், 77ஆம் ஆண்டுக் கலவரம், 83ஆம் ஆண்டுக் கலவரம் என்றுதமிழ் மக்கள் மீதுவன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. பிள்ளையைக் கிள்ளிவிட்டுதொட்டிலை ஆட்டுவது போல் எமதுமுக்கியதேசியஅரசியல் கட்சிகள் தமது ஆதரவாளர்கள் மூலமாக எங்களுக்குச் செய்வ தல்லாம் செய்துவிட்டு துக்கம் விசாரிக்க வந்தார்கள். இது இலங்கை அரசியலில் சர்வசாதாரணம்.

இவற்றினால் சிங்கள அரசியல் தலைமைத்துவம் எதைக் கூறுகின்றது? "தமிழர்களை நாம் கட்டி ஆண்டு கொண்டிருகின்றோம், அவர்களை அதிகம் பேசவிடக் கூடாது. விட்டால் எமது உண்மை சொரூபம் உலகத்திற்குத் தெரிந்துவிடும். ஆகவே அதிகம் பேசுபவனுக்கு உயிர்ப் பயத்தை ஏற்படுத்துவோம்,வெள்ளைவானில்கொண்டு சென்று உரியதண்டனை வழங்குவோம். சர்வதேசம் கேள்வி கேட்டால் நாங்கள் உதாரண புருஷர்கள் பிழையே செய்யமாட்டோம் என்போம். சென்றமுள்ளிவாய்க்கால் போரில்கூட ஒருகையில் மனித உரிமைசாசனம் மறுகையில் துப்பாக்கி வைத்துக்கொண்டே போராடினோம். அப்பாவி ஒருவர் தானும் கொல்லப்படவில்லை. "Zero Casualties" (பூஜ்ய அப்பாவி மரணங்கள்) என்று கூறுவோம்.

இந்தத் தமிழர்கள் அனைவரும் தீவிரவாதிகள், பிரிவினைவாதிகள்,வன்முறைவாதிகள் என்றெல்லாம் உலகிற்கு எடுத்துக்காட்டுவோம்" என்றவாறுதான் கூறி வந்துள்ளனர்.

நாங்களும் அவற்றைக் கண்டு கேட்டுப் பயந்துவிட்டோம். எனவே ஒன்றில் இலங்கையை விட்டு வெளியேறி எமது மன உளைச்சல்களை வெளியிலிருந்து வெளிப்படுத்திக்கொண்டு வருகின்றோம். அங்கிருந்து உள்ளூர்வாசிகளுக்குப் பணம் தந்துதவுகின்றோம். அல்லது உள்ளூரில் இருக்கும் எம்மவரோ மக்களிடம் ஒருமுகம் அரசாங்கத்திற்கு இன்னொருமுகம் காட்டுகின்றார்கள். எமது அடிப்படை அரசியல் கோரிக்கைகளைதேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்குகின்றோம்.

ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அரசாங்கத்திற்கு வேறொரு முகம் காட்டுகின்றோம். "நீங்கள் எதைத் தந்தாலும் நாம் பெற்றுக் கொள்வோம்" என்ற தொனிப்பட அவர்களுடன் பேசுகின்றோம். "நாங்கள் "தா" "தா" என்று கேட்போம். ஆனால் நீங்கள் தருவதைத் தாருங்கள்" என்கின்றோம். அதற்குப் பிரதி உபகாரமாக அரசாங்கமும் தனது உதவிக் கரங்களை நீட்டுகின்றது. தனிப்பட்ட உதவிகளைப் பெற்று விட்டு உண்மையான, எமக்குத் தேவையானஅரசியல் பேசாது வந்து விடுகின்றோம்.

இதைப் பார்த்ததும் சிங்கள மக்கள் என்னநினைக்கின்றார்கள்? "பாருங்கள்! இவர்கள் எவ்வளவு நல்லவர்கள் நாம் சொல்வது போல் கேட்டு நடக்கின்றார்கள்" என்று கூறுகின்றார்கள். எங்களைக் கொழும்பில் தற்போதைக்கு இருக்க விடுகின்றார்கள். ஆனால் தப்பித் தவறி எமது அபிலாஷைகளை எமது அரசியல் எதிர்பார்ப்புக்களை வெளியிட்டோமானால் நாங்கள் அவர்களுக்குக் கொடூரமானவர்கள், தீவிரவாதிகள், பிரிவினைவாதிகள்,தீயவர்ஆகிவிடுவோம். இவ்வாறான மிரட்டுதலைத்தான் நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். உண்மை நிலை அறியாமல் அவர்கள் பிதற்றுகின்றார்கள். அதைப் பார்த்து நீங்கள் பதறுகின்றீர்கள்.

இதிலிருந்து ஒன்றைநாம் புரிந்து கொள்ளவேண்டும். எமது கோரிக்கைகளை, மனக்கிடக்கைகளை வெளிப்படையாக சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறாமல் எமக்குள் ஒன்று கூறி அவர்களுக்கு இன்னொன்று கூறி வந்ததால்தான் நியாயமான உரிமைகள் கோரும் ஒருவர் கூட அவர்களுக்கு நாட்டின் துரோகி ஆகின்றார். தீவிரவாதிஆகின்றார். நாங்கள் முதலில் இருந்தே எமது கொள்கைகளுக்கு விசுவாசமாக நடந்து கொண்டிருந்தோமானால் உண்மையாக உரிமைகள் கோருபவரை சிங்கள மக்கள் இந்தளவுக்கு வெறுத்திருக்கமாட்டார்கள். சிங்கள மக்கள் சீற்றமடைய நாங்கள் தான் காரணம். எங்கள் பயமே காரணம். இனிஉங்கள் கேள்விக்கு வருவோம்.

**கேள்வி:-**உயிருக்கு ஆபத்து வரும் என்று பயப்படுகின்றீர்கள்.

**பதில்:-**உயிருக்கு ஆபத்து எப்பொழுதும் யாருக்கும் இருந்து கொண்டே இருக்கின்றது. வெள்ளத்தில் பாதிப்புற்றவர்கள் எத்தனை பேர்? விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? இடிமின்னலினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனைபேர்? துரையப்பா விளையாட்டரங்கில் அண்மைய இடி மின்னலால் பாரியகண்ணாடி ஒன்றுவெடித்து விழுந்தது என்று எனக்கு காட்டினார்கள். ஆகவே உரிய நேரம் வரும்போது பலதும் நடைபெறுவன. உயிர் கூட தானாகவே பிரிந்து செல்லும்.

அதற்காக சொல்ல வேண்டியதை விடுத்து சிங்களவருக்கு ஏற்ற சொகுசான கருத்துக்களைக் கூறிக் கொண்டு இருந்தோமானால் நாம் தப்புவோம் என்று நினைப்பது தவறு. கட்டாயம் அவன் கொல்ல இருப்பவன் கொல்லத்தான் போகின்றான். சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டுசாவது மேலா அல்லது சொகுசு வார்த்தைகளைக் கூறிவிட்டு வெள்ளம் தலைக்கேறும் போது அதைமாற்றி உண்மையை உரைக்கும் போதுநாம் உயிர்ப் பலியாவது மேலா? எமக்கென்று கடமைகள் உண்டு. அவற்றை நாம் சரியாகச் செய்வோம். உயிரைக் காலன்வந்துஎடுக்கும் நேரம் எடுத்துச் செல்லட்டும். எந்தஒருஅஹிம்சா மூர்த்திகூடகொல்லப்படவேண்டும் என்றுநியதியிருந்தால் அவரின் மரணம்அவ்வாறே நடக்கும் மகாத்மா காந்தி இதற்கொரு உதாரணம்.

பாதுகாப்பைக் கோரிப் பெறுமாறு கேட்டுள்ளீர்கள். தற்போதும் எனக்குச் சட்டப்படி பாதுகாப்பு தரப்பட்டே வருகின்றது. தேவையெனில் உங்கள் கோரிக்கையைப் பரிசீலிக்கலாம்.

ஆனால் உங்கள் கேள்வியை மையமாக வைத்து இன்னுஞ் சில கருத்துக்களை வெளியிட விரும்புகின்றேன்.

முள்ளிவாய்க்காலில் நான் கூறியவற்றினாலும் அவ்வாறான ஒரு நிகழ்ச்சி நடந்ததாலும் ஏன் சில சிங்கள மக்கள் வெகுண்டெழுந்துள்ளார்கள்? பல காரணங்களை நான் கூறுவேன்.

1. முன்னைய ராஜபக்ஷ அரசாங்கம் வெளிப்படையாக எம்மைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. வாய்திறந்தால் வன்முறை அல்லது சிறைவாசம் என்றிருந்தது. ஜனநாயக நாடுகளின் ஒத்துழைப்பால் உருவாகிய இந்தஅரசாங்கம் எம்மைமுன்போல் கட்டிவைக்க முடியாதநிலையில் இருக்கின்றது. எனக்கெதிராக முகப்பதிவில் எழுதிய ஒருவரைப்பற்றி எமது அலுவலர்கள் ஆராய்ந்து பார்த்தார்கள். காலியில் வசிக்கும் அவர் மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய ஆதரவாளர் என்பதுதெரியவந்தது. அப்படியாயின் என்னைப் பற்றிக்கோபம் கொள்வோர் யாரெனில் முன்னர் எம்மைவாய்பேசாமடந்தையர் ஆக்கி வைத்திருந்தோரே அவர்கள் என்று அடையாளம் காணலாம்.

போரைமுடிவுக்குக் கொண்டு வந்தவர்கள்தான் அவர்கள். முள்ளிவாய்க்காலில் நடந்தவற்றை உலகம் அறியக்கூடாது என்று கூத்தாடுபவர்கள். உலகம் உண்மையை எந்தவிதப்பட்டும் அறிந்துவிடக் கூடாது. ஆகவே கொலை மிரட்டலாலாவது எம்மைக் கட்டுப்படுத்த வேண்டும், வாயடைக்கச் செய்யவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாய் உள்ளனர்.

2. இன்றைய நிலை வேறு. முன்னர் இருந்தநிலைவேறு. உலகம் உண்மையை உணராது முன்னர் இருந்தது. அப்பாவிகள் கொல்லப்பட்டமை, இனப்படுகொலை போன்ற உண்மைகள் தற்போது சிங்களமக்களால் உணரப்பட்டுள்ளன. சர்வதேசத்தாலும் உணரப்பட்டுள்ளன. Geneva இதுவரையில் கொடுத்தகாலக்கேடுவிரைவில் முடிவுக்குவரப்போகின்றது. அமெரிக்க ஸ்தானிகர் அதுல் கெசாப் அவர்கள் தாம் செய்வதாக ஜெனிவாவில் வாக்குறுதி அளித்தனவற்றை இலங்கை கண்டிப்பாகச் செய்து முடிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இலங்கை அரசாங்கம் செய்வதறியாது தடுமாறுகின்றது. இந்த நேரத்தில் இவ்வாறான ஒருநிகழ்வு தம்மைப் பாதிக்கும் என்று நினைத்து எம்மை அடக்க முயன்றிருக்கக்கூடும்.

3. இராணுவம் ஒருபுறம், அரசாங்கம் மறுபுறம் தமிழர்களுக்குநன்மைகள் பெற்றுத் தரப் போகின்றோம் என்று கூறிவருகின்றன. தமிழர்களின் அடிப்படை உரிமைகளைக் கொடுப்போம் என்றுஎவரும் கூறவில்லை. சிங்களவர் கூறுவதுபோல் "போணிக்கா" (பொம்மைகள்) வேண்டித் தருவதாக வாக்களிக்கின்றார்களே ஒளிய 70 வருடபிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறவில்லை. அந்தப் பிரச்சினைகளை நினைவுபடுத்தினால்தான் கொலைமிரட்டல்கள் வருகின்றன. ஆகவேதான் எந்த ஒருசிங்களஅரசாங்கமும் பாரிய நெருக்கடி இருந்தால் ஒளிய எமது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வராதுஎன்று கூறிவருகின்றேன்.

4. நான் "அடிப்படை"என்று கூறும் போதுஎமது தனித்துவத்தைப் பாதுகாப்பதையே கூறிவருகின்றேன். வடகிழக்கு இணைப்பு வேண்டும்என்று கூறும் போது அங்கு தமிழ் மொழியே இதுகாறும் கோலொச்சிவந்தது. அதுதொடர இணைப்பு அவசியம். எம்மை இரண்டாந்தரப் பிரஜைகளாக இதுவரை நடத்திவந்த அரசாங்கம் எமது தனித்துவத்தை மதித்து சுயாட்சி வழங்கவேண்டும் என்பது இரண்டாவது அடிப்படைக் கோரிக்கை. தாயகம் என்பது அதனுள் அடங்கும். மூன்றாவதாக ஒற்றையாட்சிக்குக் கீழ் சிங்களமேலாதிக்கம் தொடரும் என்பதால் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் யாப்புகோரப்படுகின்றது.

5. சிங்களமக்கள் மத்தியில் பல பிழையானசெய்திகள் சென்ற 70 வருடங்களாக பரப்பப்பட்டு வந்துள்ளன. இந்தநாடுதொன்று தொட்டு சிங்களவர் வாழ்ந்து வந்த நாடு. தமிழர் சோழர் காலத்தில் கி.பி பத்தாம் நூற்றாண்டில்தான் வந்தார்கள். அவர்கள் கள்ளத் தோணிகள். அவர்களை இந்தியாவிற்கு அடித்துத் துரத்தவேண்டும். அண்மையில் வந்தவர்கள் தமக்கென ஒருநாட்டைக் கேட்பது எவ்வளவு அயோக்கியத்தனம். இந்த உலகத்தில் எமக்கென இருப்பது இந்த ஒரு நாடே. அதையும் தமிழர் பங்கு போடப் பார்க்கின்றார்கள். விடமாட்டோம் என்கின்றார்கள் அப்பாவிச் சிங்களவர்கள்.

உண்மையை அவர்களுக்கு எடுத்துரைக்கயாரும் இல்லை. இலங்கையின் மூத்தகுடிகள் தமிழரே. சிங்களமொழி கி.பி 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளிலேதான் வழக்கத்திற்குவந்தது. அதற்கு முன்னர் வாழ்ந்தவர்களைச் சிங்களவர் என்றுஅழைக்கமுடியாது. துட்டகைமுனு கூட சிங்களவனாக இருந்திருக்க முடியாது. DNA பரிசீலனைகள் இன்றையசிங்களவர் ஆதித் திராவிடரே என்று கூறுகின்றன. தமிழர்பற்றிய உண்மையை அறிந்து கொண்டால் சிங்களமக்களின் ஆர்ப்பாட்டங்கள் குறையக் கூடும். அல்லது ஏமாற்றத்தில் இன்னமும் உக்கிரமடையக்கூடும்.

எம்மைக் கொல்ல எத்தனிப்பவர்கள் காட்டுமிராண்டிகள் போல் நடந்துகொள்ளாமல் தமது தலைவர்களை எம்முடன் பேசஅனுப்ப வேண்டும். நாம் எமது அடிப்படைகளை அவர்களுக்கு விளங்கவைப்போம். புரிந்துணர்வு அற்ற இன்றைய நிலையே இவ்வாறான பதற்றங்களுக்கு இடமளித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழ்ச்சங்கம் நடத்தும் விவாதச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இளையவர்களின் விவாதத்திறனை மேம்படுத்தும் நோக்கில் விவாதச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு தனியாகவும் 35 வயதுக் குட்பட்ட இளையவர்களுக்கு தனியாகவும் நடைபெறவுள்ள இப் போட்டியில் பாடசாலை மாணவர்களுக்கான போட்டி எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என போட்டி இணைப்பாளர் சி.சிவஸ்கந்தஶ்ரீ தெரிவித்துள்ளார்.

பதிவுசெய்த பாடசாலைகளை காலை 9 மணிக்கு முன்னர் வருகை தந்து தமது பதிவுகளை உறுதிப்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். திறந்த பிரிவுப் போட்டிகள் நடைபெறும் தினம் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் எதுவும் ஆக்கபூர்வமாகச் செயற்படவில்லை

## அதிருப்தியில் ஆட்குறைப்பில் இறங்கினார் மைத்திரி




(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களின் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய தேவையுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள பெரும்பாலான தூதரகங்களின் பணியாளர்களின் எண்ணிக்கை பாதியாக குறைக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் எதுவும் ஆக்கபூர்வமான முறையில் செயற்படவில்லை என்றும் அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார். (இ-7)





வடமராட்சி கரணவாய் கலட்டி பிள்ளையார் கோவில் வருடாந்த தேர்த் திருவிழாவின் போது... (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)


# நினைவுகளுடன் 31 ஆம் நாள்

அமரர் திருமதி

அ.எலிசபெத் கெலன்

தோற்றம் 02 01 1959



நெஞ்சமதில் நிறைந்திட்ட நீங்காத உங்கள்
நினைவுகள்
எம்மனதில் நீங்க மறுக்குது..
நேற்றுப் பார்த்த உங்கள் முகம் இன்று காண
எம் கண்கள் பரிதவித்துக் கலங்குது
எம் குமுறல் கேட்குமோ... மனக்கண்ணில்
நிலைத்த நீங்கள்...
எம் கண்ணில் எப்போதான் காண்போம்?

மறைவு 30 04 2018

பிடாரி அம்மன் கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(4236)

குடும்பத்தினர்.






வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக நிறைமதி கலைவிழா நேற்று வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டு விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பிரதீபா விருது பெற்றவர்களும் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

(படங்கள்: மகாலிங்கம்)


# மரண அறிவித்தல்

அமரர் முத்துக்குமாரு யோகராசா (வைரவன்)

(மரக்கறி வியாபாரி, பருத்தித்துறை பொதுச்சந்தை)

பிறப்பு 13 02 1963



இறப்பு 28 05 2018

பத்திரகாளி கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் மாவடி ஒழுங்கை ஓடக்கரையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு யோகராசா 28.05.2018 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு பராசக்தி தம்பதியரின் மகனும், அமரர் துரைராசா (யாழ்.போதனா வைத்தியசாலை பரிசாரகர்), யோகேந்திரன், அமரர் யோகேஸ்வரன், யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புனிததாஸ், கலைவாணி ஆகியோரின் மைத்துனரும், பிரியவர்ணா, அபிராம் ஆகியோரின் மாமாவும், அபிமாறன், தங்கமாறன், பிரியசக்தி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.05.2018 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று சுப்பர் மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

மாவடி ஒழுங்கை,
ஓடக்கரை, பருத்தித்துறை.

(சி-1760)


தகவல்:
குடும்பத்தினர்.


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 60 | 120 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 95 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 100 | 70 | 100 | 60 |
| தக்காளி | 160 | 200 | 180 | 130 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 | 40 | 40 | 35 |
| கோவா | 100 | 120 | 100 | 90 | 100 | 75 |
| கரட் | 180 | 300 | 200 | 180 | 300 | 200 |
| பூசணி | 40 | 30 | 40 | 20 | 40 | 30 |
| புடோல் | 100 | 100 | 80 | 60 | 120 | 80 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 160 | 140 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 85 | 100 | 90 |
| பாகற்காய் | 180 | 200 | 160 | 110 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 70 | 160 | 70 |
| கருணைக் கிழங்கு | 60 | 120 | 60 | 65 | 100 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 60 | 90 | 120 | 120 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 | 200 | 280 | 250 |
| பீற்றூட் | 120 | 100 | 60 | 40 | 100 | 80 |
| கறிமிளகாய் | 100 | 200 | 200 | 90 | 160 | 20 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 150 | 110 | 200 | 200 |
| போஞ்சி | 250 | 300 | 250 | – | 280 | 280 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | – | – | 120 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 40 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 280 | 150 | 200 | 20 | 300 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 75 | 30-65 | 50-70 | 75 |
| இராசவள்ளி | 180 | 200 | 160 | – | 200 | 180 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 280 | 180 | 280 | 250 |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 30 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 45 | 50 | 40 | 10 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 150 | 120 | – | – | 100 | – |

# பாரதம்

## குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய மாலி அகதிக்கு பிரான்ஸ் குடியுரிமை



(பாரிஸ்)

பாரிஸ் நகரில் நான்காவது மாடி பல்கனியில் தொங்கிய குழந்தையின் உயிரை காப்பாற்றிய மாலி நாட்டு அகதிக்கு பிரான்ஸ் குடியுரிமை அளிக்கப்படும் என ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் அறிவித்துள்ளார்.

மாலி நாட்டை சேர்ந்தவர் மமூது கசாமா (வயது 22). இவர் வேலை தேடி பிரான்ஸ் நாட்டுக்கு வந்திருந்தார். பாரீசில் வடக்கு பகுதியில் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது ஒரு அடுக்கு மாடி கட்டடத்தின் முன்பு மக்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். எனவே கூட்டத்தை வேடிக்கை பார்க்க சென்றார். அங்கு கட்டடத்தின் 4ஆவது மாடியில் பல்கனியை பிடித்தபடி 4 வயது குழந்தை அழுதபடி தொங்கிக் கொண்டிருந்தது.

அதை கீழே விழாமல் பக்கத்து வீட்டில் தங்கியிருக்கும் நபர் பிடித்துக் கொண்டிருந்தார். குழந்தையை கீழே நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தவர்களில் யாரும் காப்பாற்ற முன்வரவில்லை. ஆனால் எந்தவித தயக்கமும் இன்றி கசாமா ஸ்பைடர் மான் பாணியில் கட்டடத்தின் முன்புறத்தில் சுவரை பிடித்தபடி சிலந்தி பூச்சி போன்று மேலே ஏறினார்.

பின்னர் மாடி பல்கனியில் தொங்கி கொண்டிருந்த குழந்தையை பத்திரமாக மீட்டு காப்பாற்றினார். இதற்கிடையே தீயணைப்பு படையினரும் அங்கு வந்து விட்டனர். ஆனால் குழந்தையை கசாமா காப்பாற்றிவிட்டார்.

இந்த வீடியோ பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவியது. அதை தொடர்ந்து மமூது கசாமாவுக்கு பாராட்டுகள் குவிந்தன.

இச்சம்பவம் நடந்த போது குழந்தையின் பெற்றோர் வீட்டில் இல்லை. வெளியே சென்று இருந்தனர். இதுகுறித்து அவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தினார்கள்.

ஸ்பைடர்மான் பாணியில் குழந்தையை காப்பாற்றிய மமூது கசாமாவை பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் நேரில் அழைத்து பாராட்டினார். பாரிஸ் மேயர் ஆன்னி ஹிடால்கோ பேஸ்புக் சமூக தளத்தில் வாழ்த்தி நன்றி தெரிவித்துள்ளார்.



இந்நிலையில், மமூது கசாமாவின் வீரதீரத்தை பாராட்டி கௌரவிக்கும் வகையில் அவருக்கு பிரான்ஸ் நாட்டின் நிரந்தர குடியுரிமை அளிப்பதாகவும், பாரிஸ் நகர தீயணைப்புத்துறையில் பணி வழங்கப்படும் என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் நேற்று அறிவித்துள்ளார். (7)

## மாயமான மலேசிய விமானத்தை தேடும் பணி முடிவுக்கு வந்தது



(கோலாலம்பூர்)

கோலாலம்பூரில் இருந்து பீஜிங் செல்லும் வழியில் 239 பயணிகளுடன் நான்காண்டுகளுக்கு முன்னர் மாயமான மலேசிய விமானத்தை தேடும் ஓசியன் இன்பினிட்டி நிறுவனத்தின் வேட்டையும் தோல்வியில் முடிந்தது.

மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் இருந்து சீன நாட்டின் தலைநகரான பீஜிங் நகருக்கு 8-3-2014 அன்று 227 பயணிகள் மற்றும் விமானிகள் உள்ளிட்ட 12 பணியாளர் என மொத்தம் 239 பேருடன் புறப்பட்டு சென்ற மலேசியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான போயிங் 777 ரக விமானம் (எம்.ஹெச்.370) இந்திய பெருங்கடலுக்குள் (தெற்கு) விழுந்தது.

இதையடுத்து, அந்த விமானத்தை தேடும் பணியில் விமானங்கள், கப்பல்கள் மற்றும் அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் ஆகியவை ஈடுபடுத்தப்பட்டன. அவுஸ்திரேலியக் கடற்படை கப்பல் 'ஓஷன் ஷீல்ட்' மற்றும் எச்.எம்.எஸ் 'எக்கோ' என்ற இரண்டு கப்பல்கள் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இதுதவிர மேலும் பல தனியார் நிறுவனங்களும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டன.

அவுஸ்திரேலிய கடல் எல்லைக்கு உட்பட்ட ஆழ்கடல் பகுதியில் 8 நீர்மூழ்கி கப்பல்களை பயன்படுத்தி சுமார் 80 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் இரவு-பகலாக தேடும் பணிகள் நடைபெற்று வந்தன. ஆனால், இதுவரை எந்த நல்ல செய்தியும் கிடைக்கவில்லை.

இந்த தேடுதல் வேட்டையை மூன்று மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என மலேசிய அரசு கெடு விதித்திருந்தது. அந்த கெடுகாலம் முடிவடைந்ததாலும், தற்போது கடல் பகுதியில் தேடுதல் பணிக்கேற்ற பருவநிலை இல்லாததாலும் நான்காண்டுகளுக்கு முன்னர் மாயமான மலேசிய விமானத்தை தேடும் ஓசியன் இன்பினிட்டி நிறுவனத்தின் பணிகள் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

## ஸ்டெர்லைட் ஆலை நிர



### தமிழக அரசு

(தூத்துக்குடி)

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுமாறு கோரி போராட்டம் நடைபெற்று பலர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட நிலையில் அந்த ஆலையை மூடுமாறு அரசாங்கம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பாளர்கள் நடத்திய போராட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் பலியாகினர். இருப்பினும் போராட்டத்தில் பொலிஸாரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டவர்கள் மற்றும் படுகாயமடைந்தவர்களின் உறவினர்கள் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து இதற்கான நடவடிக்கையில் தமிழக அரசு இறங்கியுள்ளதாக ஓ.பன்னீர்செல்வம் பேட்டியளித்தார். இதனை அடுத்து, பிற்பகல் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் உயரதிகாரிகள் உடன் இது தொடர்பாக ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவதற்கு தமிழக அரசு நேற்று முன்தினம் மாலை அரசாணை வழங்கியது.

பொதுமக்களின் உணர்வுகளுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்பளித்து இந்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக, இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்

### தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்

## சட்டசபையில் அறிக்கையை தாக்கல் செய்தார் முதல்வர் பழனிச்சாமி



(சென்னை)

தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக சட்டசபையில் நேற்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அறிக்கை தாக்கல் செய்தார்.

மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடத்தி அந்தந்த துறைக்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்காக தமிழக சட்டசபை நேற்று கூடியது. முதல் நாளான நேற்று தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக கவனயீர்ப்பு தீர்மானம் மீது பேச உறுப்பினர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

ஆனால் அவையை நாள் முழுவதும் ஒத்தி வைத்து இந்த விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்பதற்காக, தி.மு.க. சார்பில் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. ஆனால், அதனை சபாநாயகர் நிராகரித்தார். இதனை ஏற்க மறுத்த தி.மு.க். உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

இந்த அமளிக்கு இடையே தூத்துக்குடி சம்பவம் தொடர்பாக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அறிக்கை தாக்கல் செய்தார். அதில், தூத்துக்குடியில் 22ஆம் திகதி நடந்த போராட்டம் மற்றும் துப்பாக்கி சூடு தொடர்பாக விளக்கம் அளித்திருந்தார்.

144 தடை உத்தரவை மீறி சில அரசியல் கட்சிகள், அமைப்புகள் சட்டம் ஒழுங்கிற்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் போராட்டம் நடத்தின. துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக விசாரிக்க விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர்ந்து அமைதி நிலவ பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மக்கள் உணர்ச்சிவசப்படக்கூடாது, யாருடைய தூண்டுதலுக்கும் ஆளாக கூடாது என்று முதலமைச்சர் கேட்டுக்கொண்டார். (7)

## பேருந்து லொறியுடன் ... ஏழுபேர் பரிதாபமா...

(பெங்களூர்)

தெலுங்கானா மாநிலம் கரீம்நகர் மாவட்டத்தில் அரசு பேருந்து எதிரே வந்த லொறி மீது மோதிய கோர விபத்தில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தெலுங்கானா மாநிலத்தில் அரசு பேருந்து ஒன்று வராங்கல் மாவட்டத்திலிருந்து கரீம்நகருக்கு சென்று கொண்டிருந்தது.



# வெளிநாடு

# திரந்தரமாக மூடப்பட்டது

## ரசு அரசாணை

தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாணை வெளியிடப்பட்ட சிலமணி நேரங்களில் ஆலைக்கு சீல் வைக்க மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி அங்கு சென்றார். ஆலை நிர்வாகிகளிடம் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், அவர் ஆலைக்கு சீல் வைத்தார். இதனை அடுத்து செய்தியாளர்களை சந்தித்த சந்தீப் நந்தூரி.

ஆலை நிரந்தரமாக மூடப்பட்டது. இனி ஆலை இயங்காது. அரசாணையின் படி சீல் வைக்கப்பட்டது. ஆலைக்குள் இருக்கும் பொருட்களை சீல் வைப்பது குறித்து பின்னர் முடிவெடுக்கப்படும் என கூறினார். (7)



# உ.பியில் இடி,மின்னல் தாக்கம் 9 பேர் பரிதாபமாகப் பலி



(லக்னோ)

உத்தரப்பிரதேசத்தில் இடியுடன் கூடிய கனமழை பெய்து வரும் நிலையில், மின்னல் தாக்கத்தில் இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் உன்னாவ் மற்றும் பல்வேறு பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. இதனால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக் கப்பட்டு வீட்டுக்குள்ளேயே முடங்கி இருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று இரவு ஏற்பட்ட மின்னல் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 6 பேர் பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற னர்.

இதையடுத்து, மீட்பு பணிகளை விரைவுபடுத்துமாறு மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. (7)

# ன் மோதி விபத்து ாக உயிரிழப்பு

பேருந்தானது கரீம்நகர் மாவட்டத்தில் உள்ள செங்கர்லா கிராமத்திற்கு அருகில் செல்லும் போது எதிரே வேகமாக வந்த லொறி பேருந்து மீது பயங்கரமாக மோதியது. இதில் பேருந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயமடைந்த 15 பேர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மற்றவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், விபத்தில் உயிரிழந்தவர் குடும்பங்களுக்கு முதல்வர் கே.சந்திரசேகர் தனது இரங்கலை தெரிவித்து கொண்டார். மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகள் அளிக்கப்படும் என உறுதியளித்தார். (7)



# வடகொரியா அணு ஆயுதங்களை கட்டாயம் அழிக்க வேண்டும்

## அமெ. ஜனாதிபதியும் ஜப்பான் பிரதமரும் கோரிக்கை

(வோஷிங்டன்)

வடகொரியாவின் அணு ஆயுதங்கள் கட்டாயம் அழிக்கப்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதியும் ஜப்பான் பிரதமரும் தெரிவித்துள்ளனர்.

அணு ஆயுத விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது.

இதனால் அண்மைக்காலமாக வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் அமெரிக்காவுடன் சமரச போக்கை மேற்கொண்டு வருகிறார். அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்து பேசுவதற்கும் தயார் என்று அறிவித்தார். இதனால் இருவரும் சிங்கப்பூரில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி சந்தித்துப் பேச முடிவு செய்யப்பட்டது.

இதற்கு முதலில் ஒப்புக்கொண்ட ட்ரம்ப் பின்பு மறுத்தார். இதற்கிடையே தனது நாட்டின் அணு ஆயுத சோதனைக் கூடத்தை கிம் ஜாங் உன் முற்றிலுமாக தகர்த்ததுடன் ட்ரம்பை சந்தித்து பேசுவதிலும் உறுதியாக இருந்தார். இதற்காக தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையும் நடத்தினார். இதற்கு பலனும் கிடைத்தது. கிம் ஜாங் உன் உடனான சந்திப்பை மீண்டும் ட்ரம்ப் உறுதிப்படுத்தினார்.





இந்நிலையில், வடகொரியாவின் அணு ஆயுதங்கள் கட்டாயம் அழிக்கப்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதியும், ஜப்பான் பிரதமரும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயும் நேற்று முன்தினம் தொலைபேசியில் பேசினர். வடகொரியாவுடனான சந்திப்பு குறித்து இருவரும் ஆலோசித்தனர்.

அப்போது, வடகொரியாவின் அணு ஆயுதங்கள் கட்டாயம் அழிக்கப்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயும் தெரிவித்துள்ளதாக வெள்ளை மாளிகை தரப்பு தெரிவித்துள்ளது. (7)

# புளோரிடா மாகாணத்தில் வெப்பமண்டல புயல் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை தாக்கிய வெப்பமண்டல புயல் காரணமாக அப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டனர்

அமெரிக்காவில் ஆண்டுதோறும் புளோரிடா மாகாணத்தில் ஜூன் மாதம் புயல் சீசன் தொடங்கும். இந்த ஆண்டுதற்போது ஆல்பர்டோ என்ற சூறாவளி புளோரிடா மாகாணத்தை தாக்கியுள்ளது. பனாமா நகரத்தில் மையம் கொண்டுள்ள இந்த புயல் மணிக்கு 185 கி.மீ வேகத்தில் காற்று வீசுவதுடன் பலத்த மழையை ஏற்படுத்தியுள்ளது.

ஆல்பர்டோ புயல் வடக்கு நோக்கி நகரும்போது வலுவடைந்து வருவதாகவும், வெள்ள அபாயம் ஏற்பட உள்ளதாகவும் மியாமி புயல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் பெயரிடப்பட்ட முதல் புயல் ஆல்பர்டோ ஆகும். இந்த புயலின் மூலம் மேற்கு ஜோர்ஜியா பகுதிகளில் சுமார் 30 செ.மீ அளவில் மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளதாகவும், தாழ்வான பகுதிகளில் 60 முதல் 120 செ.மீ மழை பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புயல் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மீட்பு மற்றும் நிவாரண குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# கொலம்பியாவில் ஆயுத மோதல்; கிளர்ச்சியாளர்கள் 11 பேர் பலி!

(பொகொட்டா)

கொலம்பியாவில் ஆயுதமேந்திய கிளர்ச்சிப்படையினருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த மோதலில் புரட்சிப்படையில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

தென்கொலம்பியாவின் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.



குறித்த கிளர்ச்சிப்படையினர் விவசாயிகளையும் அங்கிருந்த வியாபாரிகளையும் கொலைசெய்ய முயன்றனர். ஆகவேதான் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2016 ஆம் ஆண்டு கிளர்ச்சிப்படையோடு இடம்பெற்ற சமாதான உடன்படிக்கையில் கொலம்பிய அரசாங்கம் கையெழுத்திட்ட பின்னர் குறித்த கிளர்ச்சிக் குழு அரசியல் கட்சியாக மாறியது.

இந்த நடவடிக்கை தொடர்பில் பலர் தமது அதிருப்தியினை வெளியிட்டிருந்தனர். மேலும் சிறையில் இருக்கவேண்டியவர்கள் அரசியல் கட்சியாக்கப்படுவது தவறெனக் கூறியிருந்த நிலையில் அந்த உடன்படிக்கையிலிருந்து கிளர்ச்சிக்குழு தாமாகவே வெளியேறியிருந்தது.

இந்நிலையில் அவர்கள் கொலம்பியாவின் எல்லைப் பகுதியான ஈக்குவடோர் மற்றும் பெரு அருகில் உள்ள கசுட்டொ எனும் இடத்தில் முகாமிட்டு ஆயுதப் படையாக உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# விமானப்படைச் சிப்பாய் துப்பாக்கியுடன் மாயம்

## பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

**சீனக்குடா விமானப்படைத் தளத்தில் பணியில் இருந்த இலங்கை விமானப்படையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் கிகான் செனிவிரத்ன தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட இவர் அதற்குப் பின்னர் காணாமல் போயுள்ளார்.**

இதுபற்றி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை விமானப் படையும், சுதந்திரமான விசாரணை ஒன்றை நடத்தும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த இலங்கை விமானப்படைச் சிப்பாய் தனது துப்பாக்கி, 3 ரவைக்கூடுகள், 30 ரவைகளுடனேயே தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் மட்டக்களப்பு, பெரியமடுவைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

விமானப் படையின் முறைப்பாட்டையடுத்து காடுகளில் தேடுதல் நடத்திய பொலிஸார் கப்பல்துறையில், குறித்த சிப்பாயின் குடிநீர் கொள்கலன் தாங்கியைக் கண்டுபிடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டி.பியிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவு நாலரை மணிநேரம் விசாரணை

(கொழும்பு)



அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அண்மையில் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் காணி இராஜாங்க அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்கவிடம் நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவினர் நேற்று முன்தினம் நாலரை மணிநேர சிறப்பு விசாரணையை நடத்தினர்.

நேற்று முன்தினம் காலை 10 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரையே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டதாகவும் இதன் போது அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

டி.பி. ஏக்கநாயக்க கலாசார அமைச்சராக இருந்த போது அமைச்சின் வாகனமொன்றினை தேரர் ஒருவருக்கு வழங்கியதனூடாக அரச சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறியே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கனடாவில் தமிழ் இளைஞன் சுட்டுக்கொலை

(டொரண்டோ)

கனடாவில் தமிழ் இளைஞன் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழர்கள் செறிந்து வாழும் ஸ்காபரோ பகுதியில் இந்த சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

யோர்க் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற 21 வயது வினோஜன் சுதேசன் என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

Lester B. Pearson கல்லூரிக்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு 11:55 மணியளவில் இவரது உடல் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவனிடமிருந்து கொள்ளையடித்த பின்னர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.



அருகிலுள்ள சீ.சீ.ரிவி காட்சிகளை வைத்து கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்ய டொரண்டோ பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-7)



# மகிந்த-மைத்திரி இடையே இணக்கப்பாடு சாத்தியமே

## தயாசிறி நம்பிக்கை

(கொழும்பு)

அரசியலில் நிரந்தர எதிரிகள் என்று எவரும் இல்லை. எனவே, மகிந்த ராஜபக்ஷவுக்கும், மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது சாத்தியமே என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

"கூட்டு அரசாங்கத்தை வெளியேறுவதையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் விரும்புகிறார். அதற்கான நாளை தீர்மானிக்குமாறு அவர் மத்திய குழுவிடம் கேட்டுள்ளார்.

எதிர்க்கட்சியில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே.

நாற்காலி அல்லது வெற்றிலை சின்னத்தின் கீழ் அனைவரும் ஒன்றிணைந்து போட்டியிட முடியாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. எல்லோரும் ஒற்றுமையாக நாட்டை பற்றி சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# விவசாய காப்புறுதி சுமையை அரசு ஏற்கும்

## அமைச்சர் அமரவீர கோரிக்கை

(கொழும்பு)

விவசாய காப்புறுதி தவணைக் கொடுப்பனவின் சுமையை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பயிர் சேதம் ஏற்பட்டுள்ள விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கில் வருடாந்தம் நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு ஆயிரத்து 350 ரூபாவை செலுத்த நேர்ந்தது. விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)



## இன்று ஒரு தகவல்

### அனுபவங்களைப் புறக்கணிப்பதா?

ஒருவர் ஒருமுறை கசப்பான அனுபவத்தைப் பெறக்காரணமாக இருந்த செயலையே மீண்டும் மீண்டும் செய் கிறார் என்றால் அவரைப் பற்றி என்ன முடிவுக்கு வருவது?

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் கோப்பிப் பொடியில் தயாரான கோப்பி நன்றாக இல்லையென்றால் அதே பொடியை ஒரு குடும்பத் தலைவி மீண்டும் வாங்குவாரா?

"புதிய பந்து வீசப்படும் போது அவுட் சைட் த ஆஃப் ஸ்டம்ப் வரும் பந்துகளைத் தவிர்த்துவிடு" என்று ஒரு கிரிக்கெட் பயிற்சியாளர் சொல்லித் தருகிறார் என்றால் அதை ஓர் இளம் கிரிக்கெட் வீரர் புறக்கணிக்கலாமா? "கையில் லைசன்ஸ் இல்லாமல் வாகனத்தை வெளியில் எடுக்காதே!" என்பது அப்பாவின் புத்திமதி. இதைப் புறக்கணித்து மாட்டிக்கொண்ட ஒரு பதினெட்டு வயது வாலிபன் மறுபடியும் லைசன்ஸ் இல்லாமல் வாகனம் ஓட்டி மாட்டிக்கொண்டால் அவனைப் பற்றி என்ன நினைப்பது?

பள்ளத்தில் விழுந்து அடிபட்ட ஒருவன் சொல்கிறான் ; "அந்தப் பக்கம் போகாதே" என்று. இல்லையில்லை நானும் விழுந்து பார்த்துச் சிராய்ப்புக் காயங்களை வாங்கிக் கொண்டால்தான் நீ சொல்வதை நம்புவேன் என்று ஒருவன் சொல்லலாமா?

இது கூடப் பரவாயில்லை. மறுபடி அதே பள்ளத்தில் போய் உரு ண்டு விழுவேன் என்றா அவன் அடம் பிடிப்பது? இனி நாம் நம் மனத்திற்குள் ஒரு தீர்மானம் கொண்டுவர வேண்டும். இத் தீர்மானத்திற்கு முக்கியத்துவமும் தர வேண்டும்.

நமக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்குக் கொண்டுவந்து அவற்றின் மூலம் நாம் பெற்ற பாடம் என்ன என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்த அனுபவ ஆசிரியர் சொல்லித் தந்த பாடங்களை நாம் மீண்டும் கற்க வேண்டிய அவசியம் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதை அக்கறையோடு செய்தால் நம் வாழ்வில் ஏற்படும் மனக்கஷ்டங்களையும் பல்வேறு நட்டங்களையும் தவிர்த்து விடமுடியும். அதுமட்டுமல்ல திரும்பத் திரும்ப வாங்கும் அடிகளைத் தவிர்த்து விட முடியும்.

நம் துன்பங்களுக்குள் முக்கால் வாசி நாமே வலியப் போய் இழுத்துப் போட்டுக் கொள்பவை என்றால் நீங்கள் நம்புவீர்களா? மாட்டீர்கள். ஆனால் இது தான் உண்மை.

ஆனால் நாம் பெரும்பாலும் என்ன செய்கிறோம் என்றால் , அனுபவம் தந்த அடிகளைப் புறக்கணித்துவிட்டு மீண்டும் மீண்டும் அதே அடிகளை வலியப் போய் வாங்கிக் கொள்கிறோம்.

இதற்கும் ஒரு மக்கு மாணவன் படித்த வகுப்பிலேயே இருந்து கொண்டு படித்த பாடங்களையே திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டே இருப்பதற்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்


செல்வி தா.குணரஞ்சினி
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தமிழ்மொழி
நேரம் : ஒரு மணித்தியாலம்


● தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

● வேறுபட்ட உருவின் கீழ்க் கோடிடுக.


01.



02.



03.



● வினா 4, 5 இல் முதலுருவுக்கு சமமான உருவைத் தெரிவு செய்து கோடிடுக.

04.



05.



● வினா 6, 7 என்பவற்றுக்கு உருக்களை அவதானிக்குக.



A B C D E F

06. மேலே காட்டப்பட்ட உருக்களிலுள்ள பிராணிகளை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம். இக் கூட்டங்களைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.


1. A,C,E / B,D,F   2. B,E,F / A,C,D   3. C,D,F / A,B,E


07. A,E யில் காணப்படும் இயல்பு ஆனால் ஏனையவற்றில் இல்லாத இயல்பு?

1. முட்டையிடல்   2. நீர்ச் சூழலை நாடுதல்   3.பறத்தல்


● தரப்பட்ட இரு உருக்களை ஒன்றின் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

08.





09.





10. "கொடுத்தவாக்கை மீறுதல்" என்பதற்கான மரபுத்தொடர்?

1. பொடிவைத்துப் பேசுதல்   2. நாக்குப் புரளுதல்   3. புறங்கூறுதல்

11. அத்தி பூத்தாற் போல என்னும் உவமைக்கு பொருத்தமான கருத்து?

1. அடிக்கடி நிகழ்தல்   2. மிக அருமையாக நிகழ்தல்
3. ஒற்றுமையில் வேற்றுமை

12. வானம் மப்பும் மந்தாரமுமாய் காட்சி அளிக்கிறது. குளிர்காற்று வீசுகிறது எனின்.

1. இன்று மழை பெய்யலாம்
2. புயற்காற்று வீசலாம்
3. நில அதிர்வு ஏற்படலாம்

13. சந்திரனுக்கு மதி எனில் சூரியனுக்கு?

1. தூரிகை   2. ஞாயிறு   3. திங்கள்

14. 8 என்பதற்கு 11 போல சித்திரை?

1. வைகாசி   2. ஆனி   3. ஆடி

15. ஒருவர் சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பது?

1. பிரயாணச் செலவைக் குறைப்பதற்காக
2. நினைத்த நேரம் பிரயாணம் செய்ய
3. நீண்ட தூரம் பிரயாணம் செய்ய

16. **LKNM.NS** என்பது ஒரு பொருளின் விலையாகும். எனின் இக்குறியீடு குறிக்கும் தொகை?

**1. 8765.50   2. 4653.50   3. 4763.50**

17. திருத்தமான கருத்தைத்தரும் வாக்கியத்தைத் தெரிவு செய்க?


1. இயற்கை வளங்களைப் பாதுகாத்து பயன்படுத்துவது எமது கடமை ஆகும்.
2. வளங்களைப் பாதுகாத்துப் பயன்படுத்துவது எமது இயற்கைக் கடமை ஆகும்.
3. எமது கடமை பாதுகாத்து இயற்கை வளங்களைப் பயன்படுத்துவது ஆகும்.

18. நான்கு மனிதர் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு 4 மணித்தியாலங்கள் நடந்து **16 km** தூரம் சென்றனர். ஒருவர் ஒரு மணித்தியாலத்தில் நடந்த தூரம்?

**1. 1 km   2. 4 km   3. 16 km**

19. இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை?

**1. 11**
**2. 9**
**3. 13**



20. **AVIW** இவ் எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியில் பிடித்துப் பார்த்தால் எவ்வாறு தெரியும்.

**1. WIVA   2. VIWA   3. WIAV**

● பலசரக்குக் கடையொன்றில் சர்க்கரை முடியக் கற்கண்டு வாங்கப் பட்டது. சர்க்கரை வாங்குவதற்கு முன்னர் சீனி வாங்கப்பட்டு இருந் தது. கற்கண்டு விற்கப்பட்டு பனங்கட்டி வாங்கப்பட்டது.

21. முதலில் வாங்கப்பட்டது?

1. கற்கண்டு   2. சர்க்கரை   3. சீனி

22. கடைசியாக வாங்கப்பட்டது?

1. சீனி   2. பனங்கட்டி   3. கற்கண்டு

● வசந்திக்கும் சாந்திக்கும் சுகந்திக்கும் பாடத்தெரியும். ஜெயந்திக்கும் சுகந்திக்கும் ஆடத் தெரியும். சுகந்திக்கும் ஆனந்திக்கும் சாந்திக்கும் நாடகம் நடிக்கத் தெரியும்.

23. பாடவும் ஆடவும் நடிக்கவும் தெரிந்தவர் யார்?

1. ஆனந்தி   2. சுகந்தி   3. சாந்தி


24. நடிக்க மட்டும் தெரிந்தவர்?

1. ஆனந்தி   2. சுகந்தி   3. வசந்தி

25. ஒரு தோட்டத்தில் கத்தரி, வெண்டி, மிளகாய், தக்காளிச் செடிகள் என்ற ஒழுங்கில் நடப்பட்டிருந்தன. 45 ஆவது செடி?


1. வெண்டி   2. கத்தரி   3. தக்காளி

26. கோலத்தை அவதானித்து வட்டத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிக.





**1. 14**
**2. 13**
**3. 06**

27. கோலத்திற்கு ஏற்ப வெற்றுக் கட்டத்தில் வரக் கூடிய எண்ணைத் தெரிவு செய்க.





**1. 61   2. 125   3. 11**

28. கோலத்தில் அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.



- ஒரு சதுரமுகியின் பக்கங்கள் உருவில் காட்டப்பட்டுள்ளது.




29. P என்ற எழுத்துக்கு எதிர்ப்பக்கமுள்ள எழுத்து?

1. F 2. S 3. M

30. S என்ற எழுத்துக்கு எதிர்ப்பக்கமுள்ள எழுத்து?

1. F 2. M 3. E

- **20km இடைத்தூரமுள்ள இரு இடங்களிலிருந்து சுகந்தனும் சிவாவும் ஒரு திசையிலும் குமார் அவர்களுக்கு எதிர்த்திசையிலும் எதிர் எதிராக ஓடுகிறார்கள். சுகந்தன் குமாரை 11km ஓடிய பின் சந்திக்கிறான். குமார் 11km ஓடிய பின் சிவாவைச் சந்திக்கிறான்.**

31. மிக வேகமாக ஓடுபவன்.

1. சுகந்தன் 2. சிவா 3. குமார்


32. மூவரில் குறைந்த வேகத்தில் ஓடுபவன்.

1. சுகந்தன் 2. சிவா 3. குமார்

33. ஒரு விளையாட்டுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் எல்லோரும் கரப்பந்து ஆடுவார்கள். ஆனந்தன் கரப்பந்து ஆடுவான். அவன் அச் சங்கத்தின்,

1. அங்கத்தவன் 2. அங்கத்தவனில்லை 3. கூறமுடியாது.

34.



35. எனது வீட்டிலிருந்து வடமேற்கு திசையில் 200m தூரத்திலுள்ள கோயிலுக்கு தென்மேற்கே 200m மீற்றர் தூரத்தில் புகையிரத நிலையம் ஒன்று இருக்கிறது. புகையிரத நிலையத்திற்கு வீடு எத்திசையில் இருக்கிறது.

1. கிழக்கு 2. மேற்கு 3. வடகிழக்கு

36. என்னிடம் ரூ 100 இருக்கிறது. எனது தம்பிக்கு ரூ 10 கொடுத்தால் இருவரிடமும் இருக்கும் பணம் சமனாக இருக்கும். எனது தம்பியிடம் ஆரம்பத்திலிருந்து பணம் எவ்வளவு?

1. ரூ. 90 2. ரூ. 80 3. ரூ. 70

- **கீழ்வரும் தகவலை வாசித்து கட்டங்களில் வரவேண்டிய சொற்களை தெரிவு செய்க.**

➢ வண்ணத்துப்பூச்சியின் பிரதான உணவு தேன் ஆகும். அவை கண்களைத் திறந்தபடியே இரவில் ஓய்வெடுக்கின்றன. இறக்கைகளில் அமைந்துள்ள [A] இறக்கைகளுக்கு சக்தியைக் கொடுக்கின்றது. [B] பல பகுதிகளிலும் வண்ணத்துப்பூச்சிகள் காணப்படுகின்றன.

37. கட்டம் A யில் வரவேண்டிய சொல்?

1. புள்ளிகள் 2. நிறங்கள் 3. நரம்பு மண்டலம்

38. கட்டம் B யில் வரவேண்டிய சொல்?

1. உலகின் 2. பாடசாலையின் 3. வீட்டின்

39. ஒரு கவிதையின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்டுள்ள விதம் கீழே காணப்படுகின்றது. அவற்றின் சரியான ஒழுங்கு முறை யாது?


A – பாலர் நாமும் வளர்வோம்
B - நூலகம் தினமும் சென்று
C – பாரினில் என்றும் உயர்வோடு
D – நல்ல நூல்களைக் கற்றுணர்ந்து

**1. BADC 2. DBAC 3. BDAC**

40. உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு தாளை இரண்டாக மடித்து இரு தாள் ஊடாகவும் துளைகளிடப்பட்டன.



அதனை விரிக்கும்போது காணப்படும் வடிவம் யாது?



நேரம் :
இரண்டு மணித்தியாலம்

01. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு பந்தியிலிருந்து விடை எழுதுக.

> புல்வெளிக்கு அப்பால் ஓர் அடர்ந்த காடு இருந்தது. காட்டின் மத்தியில் அழகாக ஏரி, ஏரிக்கரையில் இருந்த புதர்களில் ஒரு வாத்து முட்டைகளை இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது. மற்றைய வாத்துக்கள் வாய்க்காலில் சுகமாக நீந்திக்கொண்டிருந்தன. அந்த வாத்திற்கு மற்றைய வாத்துகளுடன் அரட்டை அடிக்க விருப்பமில்லை.

1. வாத்து முட்டைகளை எங்கே இட்டது ? ..........................................
2. பெயரடை மொழி ஒன்றை எழுதுக? ..........................................
3. குளம் என்பதன் ஒத்தகருத்துச்சொல்லை எழுதுக? ..........................................
4. நாடு என்பதன் எதிர்க்கருத்துச்சொல்லை எழுதுக? ..........................................
5. ஏரி + கரை எனும் சொல்லைச் சேர்த்து எடுதுக? ..........................................
6. அஃறிணை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக? ..........................................

02. ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ஆற்றுநீர் சலசலவென்று ஓடியது. இதில் சலசல என்பது?
(இணைமொழி / இரட்டைக் கிளவி / அடுக்குமொழி
2. இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா?
(பொன் விழா / வைரவிழா / வெள்ளி விழா
3. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும். இப் பழமொழியின் கருத்து.
(வீண்பெருமை / உலோபங் கூடாது / ஊதாரித்தனம்)

03. பின்வருவனவற்றுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் ..........................................
2. தனக்கென வாழாது பிறருக்காக வாழ்பவர் ..........................................

04. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

1. கவிதா சந்தையில் மாம்பழம் வாழைப்பழம் தோடம்பழம் ஆகியன வாங்கினாள்
2. ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பது வள்ளுவர் வாக்கு

05. முதலில் தரப்பட்ட சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


| | | | |
|---|---|---|---|
| 1. | உண்மை | :- | வாய்மை, பொய், தவறு, பிழை |
| 2. | சுத்தம் | :- | களங்கம், அச்சம், புனிதம், அசுத்தம் |
| 3. | சூரியன் | :- | திங்கள், ஆதவன், மதி, ஈடு |


06. பின்வரும் செய்யுட்களில் விடுபட்ட அடிகளைப் பூர்த்தி செய்க.

1. காலை மாலை எப்பொழுதும்
கடவுள் நினைவு கொண்டவராம்
வேலை இன்றிச் சிறுபொழுதும்
..........................................

2. தினைத்துணை நன்றி செயினும்.
.......................................... பயன்றெரிவார்.

07. ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1.  ..........................................

2.  ..........................................

08. தரப்பட்ட வாக்கியத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

1. உமது பெயர் என்ன? ..........................................

09. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

1. **Please come in** ..........................................
2. **Sit down** ..........................................

10. சிங்களத்தில் கூறப்படும் வாக்கியத்தின் தமிழ்க் கருத்தை எழுதுக.

1. ம(G)கே (G)கெ(Dh)தர லீ(ப்)பினய ..........................................

11. பின்வரும் சொற்றொடர் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

1. புகையிரதநிலையம் ..........................................

12. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1. அருகில் / பெரியவர் / சீடன் / சென்றான்
..........................................
2. கடிப்பது / பழக்கமாகும் / தவறான / நகம்
..........................................

## சொந்தப் பிரச்சினைகளில் அதிக கவனம்

# மக்கள் பிரதிநிதிகள் மீது முன்னாள் எம்.பி.கடும் விசனம்



(யாழ்ப்பாணம்)

மக்கள் பிரதிநிதிகள் மக்களுடைய பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதனை விட தமது பிரச்சினைகளிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள் என ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரம் சுட்டிக் காட்டியுள்ளார்.

தென்மராட்சி-எழுதுமட்டுவாழ் வடக்கு படித்த மகளிர் குடியிருப்புத் திட்ட மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை எழுதுமட்டுவாழில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு பிரதேசத்தையும் அபிவிருத்தி செய்ய தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியாக வருடத்திற்கு ஒரு கோடியும், மாகாண சபை உறுப்பினர்களுக்கு 25 இலட்சமும் ஒதுக்கப்படுகிறது. எமது உறுப்பினர்கள் அதனை என்ன செய்கிறார்கள் எனத் தெரியவில்லை. மக்கள் பிரதிநிதிகள் மக்களுடைய பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதனைவிட தமது பிரச்சினைகளிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள். எமது வடக்கு மாகாண சபையில் கூட கடந்த காலத்தில் ஊழல் இடம்பெற்று அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டமை அனைவரும் அறிந்த ஒன்று. அமைச்சர்கள் தவறு செய்தால் வெறுமனே பதவி தான் இழக்கப்படும் . ஆனால் சாதாரண மக்கள் தவறு செய்தால் அது வேறுவிதமாக அணுகப்படுகிறது.

பிணைமுறி மோசடியில் 1100 கோடி மக்களின் பணம் சூறையாடப்பட்டுள்ளது. பெற்றோல் வரி, மண்ணெண்ணெய் வரி, மிளகாய் வரி என மக்கள் பணத்தில் சேர்ந்த திறைசேரிப் பணமே கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. எமது அபிவிருத்திக்கு நிதி இல்லை எனக் கூறும் உறுப்பினர்கள் எமது பணத்தை கொள்ளையடிக்கின்றனர். அண்மையில் பிரதமர் ரணிலுக்கு 60 கோடி ரூபா செலவில் சொகுசு வாகனம், அமைச்சர்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்ய 1200 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இது மக்கள் பணம். மக்கள் பணத்தை சூறையாடுபவர்களே அமைச்சர்களாக உள்ளனர். மயிலே மயிலே இறகு போடு என்றால் போடாது.

இதற்காக நாம் ஒன்றுசேர்ந்து குரல் கொடுக்க வேண்டும். படித்த மகளிர் குடியிருப்புத் திட்ட மக்களின் மேம்பாட்டிற்கு பிரதேச சபை தவிசாளர், வட்டார உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் ஆகியோர் அக்கறை செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மொழி உதவியாளர்கள் 3300 பேர் விரைவில் அரச நிறுவனங்களில் நியமனம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரச நிறுவனங்களில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பணியாற்றக்கூடிய மொழி உதவியாளர்கள் 3300 பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும், இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதற்காக விண்ணப்பிக்கும் தமிழ் மொழி விண்ணப்பதாரர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக சிங்களமொழியில் சித்தியடைந்திருக்க வேண்டும். அதேபோல் சிங்கள விண்ணப்பதாரர்கள் சிங்கள மொழிக்கு மேலதிகமாக தமிழ் மொழியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இந்த பதவிக்காக இணைத்துக் கொள்ளப்படுபவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு அனைத்து அரச அலுவலகங்களிலும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் கூறியுள்ளார். (இ-7)

# லண்டனில் மேயரானார் இலங்கைப் பெண்



(லண்டன்)

பிரித்தானியாவில் இலங்கை பூர்வீகத்தைக் கொண்ட பெண் ஒருவர் மேயராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

லண்டனில் ஹாரோ பகுதியின் மேயராக கரீமா மரிக்கார் (Kareema Marikar) என்ற பெண் முதன்முறையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கரீமா மரிக்கார் லண்டனிலுள்ள பல தொண்டு நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார். அவர் சமூக சேவைகளுக்காக தன்னை அர்ப்பணித்த ஒருவராவார்.

இலங்கையர்களிடம் மாத்திரமின்றி மேற்கு ஹாரோ மக்கள் மத்தியிலும் பிரபல்யமடைந்த ஒருவராக கரீமா மரிக்கார் விளங்குகிறார்.

அவரது பதவிப் பிரமாண நிகழ்வில் லண்டனில் வாழும் பெருமளவு இலங்கையர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஹாரோ நகர மக்கள் தன் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் மூன்று பிள்ளைகளை வளர்க்கும் தாய் என்ற ரீதியிலும் தனக்குக் கிடைத்த அனுபவம் குறித்து பெருமை அடைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் பிறந்து வளர்ந்த கரீமா, கண்டி மகளிர் பாடசாலையின் பழைய மாணவியாவார். பின்னர் 28 வருடங்களாக லண்டன் ஹாரோ பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றார்.

கடந்த காலங்களில் ஹாரோ நகர சபையின் லேபர் கட்சி உறுப்பினராக கரீமா பாரிய சேவையை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1427

Search for people, places and things Nagendram Home

### கிஷோர்

தாலி கட்டிய மறுநிமிடமே கணவனிடம் பெண்ணுக்கு உருவாகும் நம்பிக்கை



இறுதிவரை தொடர்வதற்குப் பெயர்தான் திருமண வாழ்க்கை

### குகதாஸ்

என்னை முட்டாள் என்று யாராவது கூறினால் வருத்தப்படுவதில்லை...



முட்டாள் ஏமாறுபவனே தவிர யாரையும் ஏமாற்றுபவன் அல்ல

### கெங்காதரன்

எந்த ஆணும் மனைவியின் கோபத்திற்கு பயந்து ஒதுங்கிப் போவதில்லை



அவளின் கண்ணீருக்குப் பயந்துதான் அவ்விடத்தைவிட்டு விலகிப் போகின்றனர்

### கிஷாலினி

அப்பாவின் சொத்தும் மாமனாரின் வரதட்சணையும் இல்லாமல்



ஒரு ஆண் தன் மனைவியை காப்பாற்றுவான் எனில் அவனே உண்மையான ஆண் மகன்...!

### குகப்பிரியா

என்னிடம் உள்ள தவறுகளை என்னிடமே கூறிவிடுங்கள்



ஏனெனில்... என் தவறுகளை மற்றவர்களால் திருத்திட முடியாது...

### கயல்விழி


ஒவ்வொரு தோல்வியும் ஒவ்வொரு அனுபவம்



ஒவ்வொரு இழப்புக்களும் ஒவ்வொரு எச்சரிக்கை..

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.





யாழ். அளவெட்டி கும்பளாவளைப்பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது...

# மலையகத்தில் மினி சூறாவளி ஆறு குடியிருப்புக்கள் சேதம்

(ஹற்றன்)

மலையகத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையால் இருவேறு பகுதிகளில் ஏற்பட்ட மினி சூறாவளியினால் 6 குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன.

நேற்று அதிகாலை ஏற்பட்ட மினி சூறாவளியால் வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெம்பஸ்டோ தோட்டத்தில் லயன் குடியிருப்பின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் மூன்று குடியிருப்புக்கள் சேதமாகியுள்ளன.

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெலிஓயா கீழ் பிரிவு தோட்டத்தில் லயன் குடியிருப்பொன்றின் கூரைப்பகுதி காற்றினால் அள்ளுண்டு சென்றதையடுத்து மூன்று குடியிருப்புக்கள் சேதமாகியுள்ளன. உயிராபத்துக்கள் ஏற்படாத போதிலும் இரண்டு குடியிருப்புக் கள் கடும் சேதமாகியுள்ளதுடன், ஏனைய குடியிருப்புக்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (இ-7)

# நிமோனியாவால் ஐவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நிமோனியா காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, மாத்தறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஐவர் கடந்த ஒருசில தினங்களுக் குள் திடீரென உயிரிழந் துள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த மாதத்தின் கடந்த 28 நாட்களில் இந்த காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 12 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

21 வயது கோசல செவ்வந்தி மற்றும் 76 வயது ஹேவகே கருணாதாச ஆகியோரே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதோடு, மாத்தறை வைத்தியசாலையில் நிகழ்ந்த நான்கு மரணங்களில் மூன்று நிமோனியா காய்ச்சலால் ஏற்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிறிசாந்த சந்திமல் (வயது-43), டி.டபிள்யூ.ஜெமிஹாமி (வயது-80) மற்றும் ஜே.டபிள்யூ. குணசேகர (வயது-79) ஆகியோர் இந்த காய்ச் சலால் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காய்ச்சலால் பீடிக்கப்பட்டு பலர் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தென் மாகாணத்தில் பரவிவரும் நிமோனியா காய்ச்சலைத் தொடர்ந்து மாகாணத்தின் பாடசாலைகளின் தரம் 1-5 வரையிலான ஆரம்பப் பாடசாலை களை மூடுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத் துள்ளது.

இதனடிப்படையில், காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களின் 7 கல்வி வலயங்களுக்குட்பட்ட ஆரம்ப பாடசாலைகளை இன்று 30ஆம் திகதி வரையில் மூடுவதற்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் 37 வருடங்களின் பின்னர் மாணவியால் உருவாக்கப்பட்ட இலச்சினை!



(கொழும்பு)

நிர்வாகக் செயற்பாடுகளுக்கான நாடாளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்) அலுவலகத்திற்கு 37 வருடங்களுக்குப் பின் உத்தியோகபூர்வ இலச்சினை உருவாக்கிய பெருமையை மாண்வி ஒருவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை ஓம்புட்ஸ்மன் அலுவலகம் கடந்த 37 வருடங்களாக சேவையாற்றி வருகின்ற போதும் அந்த அலுவலகத்திற்கு உத்தியோகபூர்வ இலச்சினையும் இணையத்தளமும் இதுவரை இருக்கவில்லை.

இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு நாடளாவிய ரீதியில் பாடசாலை ஓவியப் போட்டியொன்றினை நடத்தி அதன்மூலம் இலட்சினையை தேர்ந்தெடுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்படி 2016 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் பாடசாலை ஓவியப் போட்டியொன்று நடத்தப்பட்டது. இதில் நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளைச் சார்ந்த 10, 11ஆம் தரங்களைச் சேர்ந்த மாணவர்களால் 116 ஓவியங்கள் தபால் மூலமாக அனுப்பப்பட்டன.

இதில் கல்வி அமைச்சின் சித்திரப் பிரிவின் பிரபல நடுவர்சபையினால் ஆராய்ந்து, 2016ஆம் ஆண்டில் 10ஆம் தரத்தில் கல்வி கற்ற காயத்ரி பபோத பெரேரா என்ற மாண வியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஓவியம் தெரிவு செய்யப்பட் டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, 37 வருடங்களுக்குப் பின் ஓம்புட்ஸ்மன் அலுவலகத்திற்கு புதிய உத்தியோகபூர்வ இலச்சினையும் இணையத்தள அங்குரார்ப்பணமும் ஜனாதிபதியால் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்துடன், ஓவியப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவ, மாணவியர்களுக்கான சான்றிதழ்களும் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**எண் 1 (சூரியன்)**
**(ஆளும் வேந்தர்கள்)**

தனிப்பட்ட முத்திரை பதிக்கக்கூடியவர்கள் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்ற போதும் துள்ளிக்குதித்து ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும் செய்ய மாட்டார்கள். அமைதியாக, அடக்கமாகவே இருப்பார்கள், பணத்தை சேமிப்பதில் சாமர்த்தியமிருக்கும். பெருஞ்செல்வமும் பேராற்றலுமிருக்கும்.

கஷ்டமான காலங்களில் சிக்கனமாகச் செயற்பட்டு பொருளாதாரத்தைச் சீர்படுத்தும் நிர்வாகிகள். தம்முடைய வீடு, வாகனம், அலுவலகம் அனைத்தையும் நாகரிகப் பொருட்களால் அழகுபடுத்துவார்கள். இயற்கையின் அழகைக் கண்டு உள்ளம் பூரிப்படைவார்கள். சுத்தமான உடையணிவார்கள். கடல் கடந்த பிரயாணம் செய்வதில் அளவுகடந்த ஆர்வம் மிக்கவர்கள். புதுப்புது கண்டுபிடிப்புகளில் நாட்டமிருக்கும். கூம அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடியவர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவார்கள். ஆன்மீகம், சட்டம், அறிவியல் துறைகளில் நுணுக்கங்களைக் கையாள்வார்கள். வருங்கால சந்ததிகளுக்கு வழிகாட்டும் வித்தகர்கள். நறுமணப் பெருட்கள் மீது நாட்டமுடையவர்கள். பிறருடைய பிரச்சினைகளைப் பஞ்சாயத்துப் பேசித் தீர்த்து வைப்பார்கள். சென்ற இடமெல்லாம் சிறப்பையும், தனக்கென்று தனி முத்திரையையும் பதிப்பார்கள். தன்னிகரற்றவர்கள்.

கீழ்த்தரமான செயல்களை வெறுப்பார்கள். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி ஆசைகளுக்கு அணைபோடும் பக்குவம் வாய்ந்தவர்கள். எப்போதும் பலபேர் புடைசூழ, நடுவில் இருப்பதையே விரும்புவார்கள். ஒருவித ஈர்ப்புசக்தி உடல் முழுவதுமிருக்கும். பேச்சை விட செயல் திறமையே இவர்களை அதிகம் கவரும். எளியவர்களுக்கு மனமுவர்ந்து உதவிகள் பல செய்வார்கள். மன்னிக்கும் மனப்பாங்குடையவர்கள்.

திறமைசாலிகளுக்கு ஊக்கமளிப்பார்கள். மற்றவர்கள் விடயங்களில் காரணகாரியமில்லாமல் வீணாக ஈடுபடமாட்டார்கள். தத்துவ ஆராய்ச்சி உடையவர்கள். குலப் பெருமை காப்பார்கள். பிறர் அறியாத விடயங்களை அறிவதில் அதிக ஆர்வமுடையவர்கள். தேசபக்தி உடையவர்கள். உடல், மனப்பலமிக்கவர்கள். எதிலும் எச்சரிக்கையுடனும், பெற்றவர்கள் மீது மரியாதையுடனும், வாழ்க்கைத்துணை மீது அக்கறையுடனும் இருப்பார்கள். வெற்றி அடையும் வரையிலும் அக்காரியத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேசமாட்டார்கள்.

வயது ஏற ஏற எல்லாத்துறையிலும் ஏற்றம் வந்து கொண்டேயிக்கும். இவர்களின் பேச்சு சமுதாயத்தைச் சீர்படுத்து



விநாயகராமன்

வதாக இருக்கும். மற்றவர்கள் கருத்தை நம்பாமல், தன் மனம் கூறும் ஆலோசனைப்படி தீர விசாரித்து சுயமாக முடிவெடுப்பார்கள். தனிமையில் தாமாகவே பேசிக் கொள்ளும் பழக்கமிருக்கும். தனிமையில் ஒருமுகமாக சிந்தனையில் மூழ்கிவிடுவார்கள். அனைத்து மொழிகளையும் அழுத்தம் திருத்தமாகப் பேசக் கூடியவர்கள். காதல் விடயத்தில் மிகவும் கவனம் தேவைப்படும். அனைத்து விதமான வர்ணங்களும் இவர்களைக் கவரும். கவர்ச்சியாக ஆடையணிவார்கள். மற்றவர்களும் தம்மைப் போலவே இருக்க வேண்டும் என்று எண்ணுவார்கள். பழையனவற்றைப் புதுமையாகப் மாற்றுவதில் வல்லவர்கள். வெற்றி, தோல்விகளைச் சமமாகவே எண்ணுவார்கள்.

வேதாந்தம் பேசுவார்கள். மற்றவர்கள் பேச்சில் உள்ள தீமைகளை நீக்கிவிட்டு நன்மைகளை மட்டுமே எடுத்துக்கொண்டு, பஞ்சாயத்து பேசி சமாதானம் செய்வதில் கில்லாடிகள். தீய நபர்களுக்கு அறிவுரை கூறித் திருத்தும் நல்ல உள்ளம் படைத்தவர்கள். இளகிய மனமும், எளிவர்களுக்கு உதவும் குணமும், கடுமையான உழைப்பும், செல்வாக்கும் சொல்வாக்கும் இலட்சியத்தில் காட்டும் உறுதியும், அழுத்தமான பேச்சும் இவர்களின் வெற்றிக்கு மூலகாரணங்கள். நட்புக்கு இலக்கணம் எழுதத் தெரிந்தவர்கள். எறும்பைப் போன்ற சுறுசுறுப்பு. தம்மை நம்பி வந்தவர்களைக் கைவிடாமல் காப்பாற்றும் திறமை, மனித குலத்தின் நன்மைக்காகப் புதுப்புதுக் கண்டுபிடிப்புகளை நிகழ்த்துதல் போன்றவற்றால் மக்களின் நம்பிக்கையும் பெறுகிறார்கள். மிகப் பெரிய மக்கள் கூட்டத்தை வசீகரிக்கும் பலமிக்கப் பேச்சாற்றல் இருக்கும். பிறர்மனம் புண் பட விடமாட்டார்கள். சினிமா, கலைத்துறைகளில் புகழ் உண்டாகும். மக்கள் ஆதரவுடன் செயற்படும் அனைத்துத் துறைகளிலும் ஜொலிக்கக் கூடியவர்கள். இவர்களின் பேச்சும் எழுத்தும் உயிரோட்டமுடையவை. அரசின் ஆதரவும், ஆதிக்க சக்தியுடன் ஆளுமைக் குணமும் நிரம்பியவர்கள்.

அதிகாரமிக்க பதவிகள் தானாகவே வந்தடையும். பெரிய பதவிகளில் இருப்பவர்களின் ஆதரவு எளிதில் கிடைக்கும்.


(தொடரும்...)

# உண்மைகள் அம்பலமாவதைத் தடுக்க ஊடகங்களை அச்சுறுத்துகிறது அரசு

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த அரசாங்கம் ஊடகங்களை அச்சுறுத்த பல முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



தற்போதைய அரசாங்கம் ஊடகங்களை அச்சுறுத்தி உண்மைகள் அம்பலமாக்கப்படுவதனை தடுக்க முயற்சித்து வருகின்றதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பெலியத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அரசாங்கம் ஊடகங்களை அச்சுறுத்தி வருகின்றது.

நாட்டில் தற்போது நெருக்கடியான நிலைமை உருவாகியுள்ளது. இந்த நிலையை அரசாங்கம் மூடி மறைக்க முயற்சிக்கின்றது எனவும் மகிந்த தெரிவித்துள்ளார். (இ-7)

# அலோசியஸ் தனக்கும் இலஞ்சம் வழங்க முயற்சித்ததாக ரஞ்சன் புதுக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பெர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியஸ் தனக்கும் இலஞ்சம் வழங்க முயற்சித்ததாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.



இது தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2015ஆம் ஆண்டு தேர்தல் செலவுகளுக்காக அர்ஜுன் அலோசியஸ் எனக்கும் ஒரு தொகைப் பணம் வழங்க முன்வந்தார். எனினும் நான் அதனை மறுத்து விட்டேன். வாங்கிக் கொள்ளவில்லை. தற்போதைய நிலையில் அர்ஜுன் அலோசியஸ் பணம் வழங்க முன்வந்தும் அதனை வாங்கிக் கொள்ளாதவர்கள் என்று பார்த்தால் ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, நானும் மட்டுமே அவ்வாறு வாங்கிக் கொள்ளவில்லை.

அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி பிரதேச அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் கலைஞர்கள் என்று பலதரப்பையும் சேர்ந்த 118 பேர் அர்ஜுன் அலோசியஸ் இடமிருந்து பண அன்பளிப்புகளைப் பெற்றுள்ளதாகவும் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# கைதிகள் 6 பேர் தப்பியோட்டம் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரம்

(கொழும்பு)

நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு அழைத்து வரப்பட்ட ஆறு கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்தேகம நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்காக அழைத்து வரப்பட்ட கைதிகளே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலை பேச்சாளர் ரி.என்.உபுல் தெனிய தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கைதிகளை தேடும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காலி சிறைச்சாலையில் இருந்து பத்தேகம நீதவான் நீதிமன்றத்துக்கு, வழக்கு விசாரணைகளுக்காக நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்ட ஆறு கைதிகளே, இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

கைதி ஒருவரை, நீதிமன்றத்திலுள்ள சிறைக் கூடத்துக்குள் அடைப்பதற்காக, சிறைக்கூட கதவை திறந்த போதே, அதனுள் ஏற்கனவே அடைக்கப்பட்டிருந்த கைதிகள், தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நாவற்காடு பகுதியில் வீடு முற்றுகை; கசிப்பு உற்பத்திப் பொருட்கள் மீட்பு!

(சாவகச்சேரி)

வீடு ஒன்று முற்றுகையிடப்பட்டதில் கசிப்பு, கோடா, உற்பத்தி பொருட்கள் மீட்கப்பட்டதாக சாவகச்சேரி மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ராஜ்மோகன் தெரிவித்தார்.



சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை வேளை, நாவற்காடு பகுதியிலுள்ள வீடு ஒன்றில் சோதனை மேற்கொள்ளப்பட்டதில் 500 மில்லிலீற்றர் ஸ்பிரிட், 36 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. (இ-60)

# 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க பிஸ்கட்டுக்களுடன் இளைஞர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தங்க பிஸ்கட்களை எடுத்து வந்த ஒருவரை நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் வெல்லம்பிட்டிய பகுதியை சேர்ந்த 26 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை 1.55 மணியளவில் சிங்கப்பூரில் இருந்து வந்த Emirates விமான சேவைக்கு சொந்தமான EK 348 விமானத்தில் குறித்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்நிலையில் பயணிகள் வருகை தரும் முனையத்தின் ஊடாக குறித்த நபர் வருகை தரும் போதே சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் இருந்து 200 கிராம் கொண்ட 2 தங்க பிஸ்கட்டுக்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்க பிஸ்கட்கள் 13,60,000 ரூபா பெறுமதியுடையவை என சுங்க ஊடக பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பில் சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு தங்க பிஸ்கட்டுக்களை அரசுடைமை ஆக்கியதுடன் சந்தேக நபருக்கு 100,000 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# செய்தித்துளிகள்

## மாத்தறையில் மர்ம நபர்கள் அதிகாலையில் துப்பாக்கிச்சூடு

(மாத்தறை)

மாத்தறை நகரில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு மர்ம நபர்கள் மாத்தறை நகரிலுள்ள தனியார் நிறுவனமொன்றின் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இச் சம்பவம் காரணமாக யாருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது. துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் மற்றும் அதனை மேற்கொண்டவர்கள் குறித்து தகவல்கள் கிடைக்காத நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

## 3 மாவட்டங்களில் மின்தடை

(கொழும்பு)

மின்சார கம்பிகளில், மரங்கள் முறிந்து விழுந்தமையால், மாத்தளை, கண்டி மற்றும் பதுளை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பல்வேறான இடங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதென, மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு அறிவித்துள்ளது. மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை, நாவுல ஆகிய பிரதேசங்களிலும், கண்டி மாவட்டத்தில் தெல்தெனிய, குண்டசாலை உள்ளிட்ட பகுதிகளிலும், பதுளையிலும் இவ்வாறு மின்சாரம் தடைப்பட்டுள்ளது. இதனால், இந்த மூன்று மாவட்டங்களிலும் சுமார் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவ்வமைச்சு அறிவித்துள்ளது. (இ-7)

## பகிடிவதையை நிறுத்தும் வரை மருத்துவ பீடம் மூடப்படும்

(கொழும்பு)

கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் புதிய மருத்துவபீட மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் பகிடிவதையை கைவிடுவதாக உத்தரவாதம் வழங்கப்படும் வரை குறித்த பீடம் தொடர்ந்து மூடப்படும் என மருத்துவபீட பீடாதிபதி வைத்தியர் திருமதி அருள்பிரகாசம் அஞ்சலா தெரிவித்துள்ளார். மருத்துவபீட மாணவர் சங்கத்திற்கும் பீடாதிபதிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மட்டு போதனா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு பீடாதிபதி அஞ்சலா கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## சஜித்துக்கு இதுவே இறுதி வாய்ப்பு தலைமையை ஏற்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை பொறுப்பை ஏற்பதற்கு அமைச்சர் சஜித் பிரேமதாசவிற்கு இதுவே இறுதியான வாய்ப்பு என அந்த கட்சியின் முன்னாள் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். கட்சி உறுப்பினர்களின் விருப்பப்படி, தாமாக முன்வந்து கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

## நடிகை தீபானி பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

பண்டாரகம பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரபல நடிகை தீபானி சில்வாவிற்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. தீபானி சில்வாவை பாணந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே பிணை வழங்கப்பட்டுள்ளது. 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் இவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இதேவேளை காயமடைந்த சிறுமியின் மருத்துவ செலவிற்காக 25,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## இலக்கிய போட்டித் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் தேசிய இலக்கியப் போட்டித் தொடருக்கான இலக்கிய கலை போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி போட்டிகளுக்கான நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலகத்தில் பெற்று நிபந்தனைக்கு அமைய ஆக்கங்களை 12.06.2018இற்கு முன்னர் யாழ்ப்பாணம் பிரதேச செயலக கலைப்பிரிவில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

பருவகாலமானது முன் பனி, பின்பனி, கார், கூதிர், இளவேனில், முது வேனில் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இயற்கையிலேயே இப் பருவகாலங்களில் கிடைக்கும் மூலிகைகளும் அதன் பாகங்களும் அவ்வப்போது உடலில் ஏற்படும் உபாதைகளை நீக்குபவையாகவே காண ப்படுகின்றன. அதேபோல் தான் மருத்துவ தாவரங்கள் அதிகமாக பூக்கும் காலங்களாக சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் பெரும்பாலான வகை வகையான பூக் களை இயற்கையாகவே பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே அவற்றின் மருத்துவ பண்புகளை விளங்கி அவற்றை எமது ஆரோக்கியத்திற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## வாழைப்பூ

வேறுபெயர்- அம்பணம், அரம்பை, ஓசை, கதலி, சேகிலி, திரணபதி.

தாவரவியற்பெயர்:- Musa Sapientum

ஆங்கிலப்பெயர்:- bonana

வாழைக்கிழங்கு (கட்டை) சூட்டைத்தரும். தண்டு குடலில் சிக்கிய மயிர், தோல், நஞ்சு இவைகளை விடுவிக்கும். பூ வெள்ளையைப் போக்கும். பிஞ்சு மூலக்கடுப் பைத் தீர்க்கும். காயால் உடல் மூற்றும் வாய்வு உண்டாகும்.

"நற்கதலிக் கந்த மனல் நல்குந் தண்டோ குடலிற்
சிக்குமயிர் தோல் நஞ் சத் தீர்த்திடுங்காண்- தொக் குறுபூ
மேகமொழிக்கும் பிஞ் சால் வெங்கடுப்பே கும் காயால்
தேகமுழுக்கக் காலாந் தோ"

**வாழைப்பூ குடிநீர்**

கருவாங் கதலிப் பூழுத் தங் கமழ்விடத்தேர்க் கொழுந் தெங்கின்
ஞருவார் பாளை பெரு மரத்தோ லொளிமா துளம் பிஞ் கிருகழஞ்சு
தருவார் நீர்வார்த் தெட் டொன்றாய்ச் சுருக்கிலவ ம்பிசின் விடயம்
ஒருமாத் திரையாய்க் கொண்டக்கா லுயாதிசார மொழிந்திடுமே"

பொருள்:- வாழைப்பூ, முத்தக்காசு, விடதாரி, பிஞ்சு தென்னம்பாளை பெருமரத்தோல், மாதுளம் பிஞ்சு ஆகிய இவைகளை வகைக்கு 12 கிராம் எடுத்து ஒன்று சேர்த்து அதற்குத் தக்க நீர்விட்டு அதை எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி அக்குடிநீரை இலவம்பிசினையும் அதிவிடயத்தையும் ஓர் அளவாக எடுத்துக் கூட்டி இடித்து, அதில் சிறிது கூட்டிக் கொடுக்க வெள்ளை, பெருங்கழிச்சல் அகலும்.

பூ

இதுகுருதிமுளைவெள்ளை, வெளி உடல் கொதிப்பு, சீதக் கழிச்சல் எருவாய்க்கடுப்பு, இருமல், கைகால் எரிச்சல் இவைகளை நீக்கும். ஆண்மை தரும்.

"வாழைப்பூ மூலரத்தம் மாபிரமி வெட்டை பித்தம்
கோழை வயிற் றுக்க டுப்பு கொல்காசம்- ஆழி யனல்
என்ன எரி கைகால் எரி வுந் தொலைந்துடலில்
மன்ன வளர்க்குந் தாது வை"

(அ.கு)

மேற்கண்ட பண்புகளைப் பெற இதைச் சமைத்துண்ணலாம்.

● இதை இடித்துச் சிற்றாமணக்கெண்ணெய் விட்டு வதக்கி, கை, கால் எரிச் சலுக்கு ஒற்றிடமிட்டுப் பிறகு இதையே வைத்துக்கட்டலாம்.

● இதன் சாற்றுடன் சிறு பனங்கற்கண்டு கூட்டி உட் கொள்ள குருதி வெள்ளை, வெள்ளை, வயிற்றுக்கடுப்பு இவைபோகும்.

● இதன் இளம் பூவை புட்டிட்டுச் சாற்றெடுத்து பனங்கற்கண்டு சேர்த்துப் பெரும்பாடுடையவர்கட்கு வழங்கலாம்.

வாழைப்பூவானது துவர்ப்புச் சுவையாக இருப்பதனால் பொடியாக அரிந்து சிறிது சுண்ணாம்பையோ அல்லது அரிசி கழுவிய நீரையோ கலந்து வடிய வைத்தால் அதன் துவர்ப்பு சுவையெல்லாம் நீராக இறங்கிவிடும். அதன் பிறகு அதை அவித்துப் பருப்புக் கலந்து சமைத்து உண்ணலாம். சுவையாக இருக்கும்.

**மருத்துவப்பயன்கள்**

● வெள்ளை சாய்தலுக்கு

வாழைப்பூ, முத்தக்காசு, விடதாரி, பிஞ்சுத்தென்னம் பாளை, பெருமரத்தோல், மாதுளம் பிஞ்சு இவை வகைக்கு 12 கிராம் எடுத்து ஒன்று சேர்த்து அதற்குத் தக்க நீர்விட்டு 1/8 ஆகச் சுருக்கி அக்குடிநீருக்குள் இலவம் பிசினையும் அதிவிடயத்தையும் வகைக்கு 5 கிராம் எடுத்துக் கூட்டி இடித்து கலந்து காலை, மாலை பாதி பாதியாகப் பருகலாம். இதனால் வயிற்றோட்டம் குணமாகும்.

வாழைப்பூச்சாறு 30 மி.லீ. உடன் சிறிது பனங்கற் கண்டு கூட்டி தினம் இரு வேளை தொடர்ந்து பருகலாம். இதனால் வயிற்றுக் கடுப்பும் குணமாகும்.

**பெரும்பாட்டிற்கு**


● வாழைப்பூவின் சாறு பிழிந்து தினமும் காலை, மாலை 100 மி.லீ. வரை 10 நாட்கள் குடிக்க பெரும்பாடு குணமாகும். மாதம் இரு முறை குடித்தல் நன்று.

● இதன் பூவை புட்டிட்டுச் சாறு எடுத்து பனங்கற்கண்டு சேர்க்கப் பெரும்பாடுடையவர்கட்டு 100 மி.லீ. தினம் 2 வேளை பருகலாம்.

● மொந்தன் வாழைப் பூவின் மேல்பட்டைகளை நீக்கி உள் குருத்தை இரண்டாகப் பிளந்து அதற்குள் கராம்பு, சாதிக்காய், சாதி பத்திரி, கஞ்சா, கறிவேப் பிலை வகைக்கு 3 கிராம், கற்கடகசிங்கி 1.5 கிராமும் எடுத்து இளவறுப்பாக வறுத்து சூரணம் செய்து வைத்து நூல் கயிற்றால் சுற்றி ஒரு பானையில் எருமைமோர் விட்டு வேகவைத்து வெந்த பின் அரைத்து நெல்லிக்காயளவு உருண்டை செய்து உலர்த்திக் கொள்க. காலை, மாலை ஒவ்வொரு உருண்டை கொடுத்து வர பெரும்பாடு நீங்கும்.

**சீதக்கழிச்சலுக்கு**

● வாழைப்பூக் குருத்து, விடதாரிக்கொழுந்து, மாதுளம்பிஞ்சு, கோரைக்கிழங்கு, பெருமரப்பட்டை சம எடை எடுத்துக் கூட்டி 8 வகை நீர் விட்டு 1/8 ஆக குறுக்கி குடிநீர் செய்து 75 மி.லீ. காலை, மாலை பருக கடுப்புடன் கூடிய சீதக்கிச்சல் தீரும்.





பாகப்படி பொரியலாக ஆவது துவரம் பருப்புடன் கூட்டிக் கூட்டமுது செய்து உண்ண சீதபேதி, உஷ்ண பேதி மூலமும் தீரும்.

**மூலத்திற்கு**

● வாழைப்பூவை இடித்துச் சாறு பிழிந்து காலை, மாலை வெறும் வயிற்றில் 100 மி.லீ. பருகி வந்தால் இரத்தமூலம் தணியும்.

வாழைப்பூ கைப்பிடி அளவு எடுத்து அதே அளவுக் கறிவேப்பிலையும் சேர்த்து மைபோன்று அரைத்து 200 மி.லீ. எருமைத் தயிரில் சேர்த்து நன்றாக கலந்து காலை, மாலை 2 வேளை வீதம் சாப்பிட்டு வரலாம். சாதாரணமாக 2 மூன்று நாட்களில் குணமாகி விடும். இல்லையெனில் மேலும் ஓரிரு நாட்களில் குணமாகும் வரை சாப்பிடலாம். எந்தக் கெடுதலும் தராது

**ஆசனக்கடுப்பு எனில்**

● வாழைப்பூச் சாற்றில் 100 மி.லீ. அளவு எடுத்து அத்துடன் கடுக்காய் தோலை தூள் செய்து 1/2 தேக்கரண்டி அளவு கலந்து காலை, மாலை இருவேளை வீதம் ஒரு வாரத்திற்கு தொடர்ந்து அருந்திவர குணமாகும்.

சிலருக்கு மலம் கழியும் போதெல்லாம் இரத்தம் பெருமளவு வெளியேறிக் கொண்டே இருக்கும். இதையே இரத்த மூலம் என்பர். இந்தத் தொல்லையுள்ளவர்கள் எளிய முறையாக வாழைப்பூச்சாறு 100 மி.லீ. அளவுக்கு காலை, மாலை இருவேளை வீதம் நோய் குணமாகும் வரை அருந்தி வரலாம். ஆனால் மருந்துண்ணும் சமயம், புளிப்பு காரத்தை நீக்க வேண்டும். எலுமிச்சை, மிளகு போன்றவற்றை புளிப்புக் காரத்திற்கு சேர்த்துண்ணலாம்.

● கைகால் எரிச்சலுக்கு

● உஷ்ணம் தணிவதற்கு.

● சளி, இருமல் தணிவதற்கு.

● குழந்தைகட்டு பல்முளைக்கும் போது உண்டாகும் வயிற்றோட்டத்துக்கு.

● மாதவிடாய் இரத்தம் மிகுதியாச் சென்றால், வாழைப்பூச்சாறு 100 மி.லீ. தயிர் கலந்து ஒருநாளைக்கு மூன்று முறை பயன்படுத்திவர குணமாகும், வாழைப்பூவை வாரத்திற்கு ஒரு தடவையேனும் சமைத்துச் சாப்பிடுவது நல்லது.

## வேப்பம் பூ

வேறு பெயர்:- அரிட்டம், துத்தை, நிம்பம், பாரிபத்திரம், பிசுமந்தம், வாதரி

தாவரவியல் பெயர்:- Azadirachta Indica

ஆங்கிலப் பெயர்:- Neem tree

"புந்திபித்தைத் தீட்டு விக் கும் புன் பிணியை யோட் டுவிக்கு
மிந்தியத்தை நன்றா யின் கவிக்கும் -சந்ததமும்
வீறுண்டாங் கற்ப மிகவு ண்டா மெஞ்ஞான்றும்
மாறுண்டா ரையபின்லா மல்.

(தேரன். வெண்பா)

வேம்பு, புத்தியைத் தெளிவிக்கும் கபப்பிணியை ஓட்டும். அழகைப்பெருக்கும். வீரியத்தை உண்டாக்கும். இது கற்ப மருந்தில் ஒன்றாகும்.

சுவை:-கைப்பு

தன்மை:-வெப்பம்

பிரிவு:-கார்ப்பு

குணம்:-பித்தத்தாலுண்டாகின்ற பெரு மூர்ச்சை, நாவறட்சி, சுவையின்மை, வாந்தி, நீடித்த வளிநோய், ஏப்பம், வயிற்றுப்புழு ஆகியவைகளைப் போக்கும்.

"பித்தத் தெழுந்த பெரு மூர்ச்சை நாத்தோடம்
சத்தத் தெழுவமனம் தங்கருசி-முற்றியகால்
ஏப்பம் மரகீட மிவையேகு நாட்சென்ற வேப்பமலரு க்கு வெருண்டு"

(அ.கு)

வ.கு:- நாட்பட்ட பழைய பூவை நெய் விட்டு வதக்கி, உப்பு, சுட்ட பழம்புளி, வறுத்தமிளகாய், கறிவேப்பிலை கூட்டிதுவையல்செய்து சோற்றுடன் கலந்துண்ண மேற் குறிப்பிட்ட நோய்கள் விலகும்.

பூவை ஊறல் குடிநீரிட்டுக் கொடுக்க அது பலக் குறைவைப் போக்கும். குன்ம நோயைக் கண்டிக்கும்.

துவரம்பருப்பை வேக வைத்து வடித்த நீரில், மிளகுரசம், செய்வது போலச் செய்து பாகபடி இறக்கிய ரசத்தில் பூவை வறுத்துப் பொடித்து கலந்து கொடுக்க நாவில் உண்டாகும் நோய்கள், சுவையின்மை, வாந்தி, ஏப்பம் முதலியன படிப்படியாகப்போம்.

புளி அரைத்த மிளகு இவ்விரண்டையும் தண்ணீரில் கரைத்துப் பிழிந்து வடிகட்டி அதில் உப்புக்கூட்டிக் கொதிக்க வைத்து நெய்விட்டு வெங்காயத்தை வறுத்து அதில் சேர்த்துக் காய்ச்சி பாகத்தில் இறக்கி நெய்விட்டு வறுத்துப் பொடி செய்த பழைய பூவை அதில் கூட்டிக் கலந்து குழம்பு போலாக்கிச் சோற்றுடன் கலந்து உட்கொண்டு வர பித்தத்தால் எழுந்த சுவையின்மை, வாந்தி, மூர்ச்சை நோய்கள் விலகும்.

**மருத்துவப் பயன்பாடுகள்**

பொதுவாக நாவறட்சி, சுவையின்மை, வாந்தி, நீடித்த வாதரோகம், ஏப்பம், வயிற்றுப் புழு என்பவற்றை போக்கும் தன்மையுடையன.

● சுவையின்மை வாந்தி

● வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி

● குடற்புண்

● பித்தம் தொடர்பான சகல பிணிகட்கும்

● மாதவிடாய் வலி, கர்ப்ப நோய்கட்கு

● உடல் ஊட்டம் பெற



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

● தொண்டைக் கம்மல், தொண்டைப்புண்ணுக்கு

● பொடுகு மறைய ஊற வும் வேப்பம் பூ

**குடற்புண்ணிற்கு**

● வேப்பம் பூவை கஷாய பக்குவமாக செய்து உடனடியாக சாப்பிடாமல் ஒரு நாள் கஷாயத்தோடு வேப்பம் பூவை ஊற வைத்து பின்னர் வடிகட்டி எடுத்துச் சாப்பிட வேண் டும்.

● 2 கைப்பிடி அளவுள்ள வேப்பம் பூக்களை 200 மி.லீ. நீரில் போட்டு ஊற வைக்கவும். குறைந்தது 4 மணி நேரமாவது ஊறவிட வேண்டும். பின்பு வேப்பம் பூவைக் கசக்கிப் பிழிந்து எடுத்துவிட்டு அந்த நீரை வடிகட்டி வைத்துக் கொண்டு வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் தினமும் 4 வேளை அந்த நீரைப் பருகி வந்தால் குடற்புண் தீரும்.

**மாதவிடாய் வலி, கர்ப்ப நோய்கட்கு**

வேப்பம்பூ 2 மே. கரண்டி, மிளகு, சீரகம் சிறிதளவு சேர்த்து அரைத்து உட்கொள்ளலாம் அல்லது வேப்பம் பூவுடன் தனியாக மிளகும் சேர்த்து அரைத்து உண்ணலாம். இதனால் மலட்டுத்தன்மையும் விலகும்.

**உடற்சூடு தணிவதற்கு**

வேப்பம் பூத்தூள் 4 சிட்டிகை எடுத்து கொத்தமல்லிக் குடிநீருடன் கலந்து தினம் இருவேளை பருகலாம்.

**பித்தப்பை நோய்கட்கு**

வேப்பம் பூத்தூள் 4 சிட்டிகை, சிறிது இஞ்சி, கொத்தமல்லி இவற்றை சேர்த்து துவையலாக அரைத்து காலை உணவோடு உட்கொண்டு வரலாம்.

**நீடித்த நாட்களாக உள்ள வாதநோய்க்கு**

வேப்பம் பூத்தூள் 4 சிட்டிகை அளவு எடுத்து சம அளவு சுக்குத்தூளை சேர்த்து பசு நெய்யில் குழைத்து உண்ண வேண்டும். 40 நாட்களுக்குத்தினம் 2 வேளை கொடுப்பது சிறந்தது.

தேனினிது, பாம்பினிது என்பர் தத்தம் துணைவி சொல் கேட்டவர்...

~ ஜெய்ஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணத்து குளிர்களியாவது பிரதமரை குளிர வைக்கட்டும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் விஜயம் செய்து அபிவிருத்திக் கூட்டங்களை நடத்தியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்த பின்னர் முதற்தடவையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வட பகுதிக்கு விஜயம் செய்துள்ளார்.

பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு உதவுவதாக இருந்தால்; காணி விடுவிப்பு, காணாமல்போனோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை என ஏகப்பட்ட விடயங்கள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதிக்க வேண்டும் என்று பலரும் கருத்துக் கூறியிருந்தனர்.

ஆனால் ஏலவே பட்ட கடனுக்காகவோ என்னவோ எந்தவித நிபந்தனைகளையும் விதிக்காமல் இரா. சம்பந்தர் தலைமையிலான கூட்டமைப்பு பிரதமர் ரணிலை ஆதரித்தது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க பறிகொடுப்பார் என்று கருதப்பட்டவேளையில், அவரை ஆதரிக்க கூட்டமைப்பு தயாரானபோது, கூட்டமைப்பின் ஆதரவில் ரணில் வென்றுவிட்டதான நிலைமை வந்துவிடக்கூடாது என்பதற்காக ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் முன்வந்தனர்.

இதன்காரணமாக கூட்டமைப்பு வாக்களிக்காவிட்டாலும் வென்றிருப்போம் என்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்பு நிலைமை மாறியது.

ஆக, ஆதரித்தும் பயனில்லை என்பதே கூட்டமைப்பின் இராஜதந்திர முடிவு. இவை ஒருபுறம் இருக்க, நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் வருகை தந்த பிரதமர் ரணில், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் தமிழ்த் தரப்பு தன்னிடம் தட்டி விட்ட பந்தை மீண்டும் தமிழ்த் தரப்பிடமே வீசி எறிந்து; நீங்கள் அனைவரும் ஒன்றுகூடி, ஒன்றாகச் சேர்ந்து என்னென்ன அபிவிருத்தித் திட்டங்கள் தேவை என்பதை முடிவு செய்து கொண்டு வாருங்கள் எனத் தட்டிக் கழித்துள்ளார்.

அபிவிருத்திக் கூட்டம் நடக்கப்போகிறது என்றால், முன்கூட்டியே மேற்போந்த அறிவித்தலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தரப்பிடம் தெரியப்படுத்தியிருந்தால், தமிழ்த் தரப்பினர் எல்லோரும் ஒன்றுகூடி முன்னுரிமை அடிப்படையில் தயார் செய்த அபிவிருத்தித் திட்டத்தை நேற்று முன்தினம் பெற்று அதனை ஆராய்ந்திருக்கலாம்.

ஆனால் முன்கூட்டி இதனைத் தெரிவிக்காமல், தட்டிக்கழித்து தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற நாடகத்தை பிரதமர் ரணில் மீண்டும் கனகச்சிதமாக செய்து முடித்துள்ளார்.

இனி நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடி தயாரிக்கின்ற அபிவிருத்தித் திட்டத்தை ஆராய பிரதமர் ஐயா எப்போது வருவார் என்பது யார்க்கும் தெரியாது.

ஏதோ யாழ்ப்பாணத்து குளிர்களி அவரைக் குளிர்மைப்படுத்தியிருந்தால் அவரின் வருகை விரைவாக இருக்கும். அதுவுமில்லை என்றால் தயாரித்த அபிவிருத்தித் திட்டத்துக்கு சாம்பிராணிப் புகை காட்ட வேண்டியதுதான்.

## இன்புளுவென்ஸா வைரஸ் தொற்றினால் நான்கு சிறுவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில்

(கொழும்பு)

நாடு முழுவதும் பரவி வரும் இன்புளுவென்ஸா வைரஸ் நோய் தொற்றினால், இதுவரை அரச வைத்தியசாலைகளில் நான்கு சிறுவர் தீவிர சிகிச்சை பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

முக்கியமாக தெற்கில் பரவும் குறித்த இன்புளுவென்ஸா நோய் தொடர்பில மக்களுக்கு முறையான விளக்கமளித்து அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்நோய் ஏனைய பகுதிகளுக்கும் பரவி உயிர்ச் சேதங்கள் ஏற்படுத்தும் அபாயம் இருப்பதாக மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்தோடு தெற்கில் பரவும் வைரஸ் தொடர்பில் சிகிச்சையளிக்கக்கூடிய மருத்துவ நிபுணர்கள் நாடளாவிய ரீதியில் 10 பேர் மட்டுமே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் இது பரவினால் தீவிர சிகிச்சைக்காக பயிற்சி பெற்ற வைத்தியர்களின் பற்றாக்குறை, உபகரணங்கள் போதாமை, சிறுவர்களுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் இட வசதியின்மை போன்ற காரணங்களால் நிலைமை மேலும் மோசமடையலாமெனவும் மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். (ம)

## மின் கசிவு காரணமாக மன்னாரில் வீடு தீக்கிரை

மன்னார் சாந்திபுரம் பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் வீடொன்று முற்றாக எரிந்து தீக்கிரையாகியுள்ளது.

மன்னார் சாந்திபுரம் நூறு வீட்டுத் திட்டத்தில் உள்ள வீடொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. எனினும் இச் சம்பவம் நடக்கும்போது வீட்டில் எவரும் இல்லை எனவும் வீட்டில் ஏற்பட்ட மின் கசிவே விபத்துக்கு காரணமாக இருக்கலாம் எனவும் ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தின் காரணமாக வீட்டிலுள்ள அனைத்து பொருட்களும் முற்றாக எரிந்து தீக்கிரையானதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்





**குடும்ப வாழ்க்கை என்றால் என்ன?**

பஞ்சபூதங்களை உள்ளடக்கிய சரீரம் என்பது வெறும் ஜடமாகும். அதற்கு தானாக இயங்கும் சக்தி இல்லை. ஆத்மா தான் சரீரத்தை இயங்கச் செய்கிறது. ஆத்மாதான் சரீரம் இயங்கச் செயற்படுவதற்கான சக்தியைக் கொடுக்கிறது. எத்தனை நாள் ஆத்மா சரீரத்தில் வசிக்கிறதோ அத்தனை நாட்கள் சரீரம் இயங்கும். அதாவது பூமியில் வசித்து கர்மம் செய்து சுக துக்கங்களை அனுபவித்து நமது கர்மங்கள் நிறைவு பெறும்போது நமது சரீரத்தை ஏற்றுக்கொண்டு செயற்படத் தொடங்குகிறது. அந்த சரீரத்தின் கர்மங்கள் தீரும்போது மற்றொரு சரீரத்தை ஏற்றுக்கொண்டு கர்மாங்கள் செய்யத் தொடங்குகிறது.

பிறப்பு- இறப்பு. இறப்பு- பிறப்பு எவ்வளவு நாட்களுக்குத் தொடர்ந்து கொண்டிருக்கிறதோ அத்தனை காலமும் இந்த இயக்கம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும். வாழ்க்கையில் நாம் புண்ணிய காரியங்களைச் செய்தால் மனிதனாகவோ, தேவர்களாகவோ பிறக்கிறோம். தீய காரியங்களைச் செய்தால் மனிதனுக்குத் தாழ்ந்த நிலையிலுள்ள மிருகங்களாகவோ மரம் செடி, கொடிகளாகவோ பிறப்பெடுக்க வேண்டியுள்ளது. நாம் செய்யும் கர்மத்தைப் பொறுத்து எறும்பு புல் முதல் தேவன் வரை நமக்கு ஜென்மம் கிடைக்கும். *(தொடரும்)*

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## நம்பிக்கை வேண்டும்



✦ கடவுளிடம் நம்பிக்கை இல்லாததே துன்பத்திற்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

✦ எண்ணத்திற்கும், பேச்சிற்கும் ஒற்றுமை இருந்து விட்டால் போதும். வேறு எந்தச் சாதனையும் தேவையில்லை.

✦ உடலைப் பெற்று விட்ட உயிர்கள் அனைத்திற்கும் இன்பம், துன்பம் வந்தே தீரும்.

✦ முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைக்கேற்ப இந்த பிறவியில் வாழ்வின் போக்கு அமைகிறது.

✦ பக்தியுடன் கடவுளின் திருநாமத்தைச் சொல்லுங்கள். எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுதலை கிடைக்கும்.

## கச்சாய் பகுதியில் விபத்து முதியவர் ஒருவர் படுகாயம்

தென்மராட்சி - கச்சாய் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் கெற்பேலியைச் சேர்ந்த 65 வயதான அ.பொன்னையா என்பவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## அர்ஜுன் அலோசியஸ் கட்சிகளுக்கு பணம் வழங்கினார்

### அமைச்சர் தயாசிறி ஜெயசேகர

(கொழும்பு)

பேர்பசுவல் ரெசரிஸ் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸினால் ஐ.தே.க. உட்பட பல கட்சிகளின் பிரசார பணிகளுக்கும் வேறு தேவைகளுக்கும் என 1.3 பில்லியன் ரூபாய் வழங்கியுள்ளதாக முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் பிரசார பணிகளுக்காக தனக்கும் அர்ஜுன் அலோசியஸ் 10 இலட்சம் ரூபாய் வழங்கிய போதும் அவரை பாதுகாக்க ஒருபோதும் தான் முயலவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான் பணம் பெற்றது தவறு என்றால், ஏனைய சகல கொடுக்கல் வாங்கல் குறித்தும் விசாரணை நடத்த வேண்டும் எனவும் அவர மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (ம)

## உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இளைஞர் ஒருவர் கைது

(கொழும்பு)

பாணந்துறை வடக்கு லங்கம பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கிகளுடன் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

களுத்துறை குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் 26 வயதுடைய இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த இளைஞர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த சந்தேக நபர் தங்கம, பிடிகல, பிளியந்தல மற்றும் மீகஹதன்ன போன்ற இடங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## திருஞான சம்பந்தர் குருபூஜை

யா/நீர்வேலி சி.சி.த.க பாடசாலை இந்து மாமன்றம் நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூஜை நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய முதல்வர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கரந்தன் கருணாலய முதல்வர் ஐ.சிவராசா சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளதுடன் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ம-136)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை ஒரு பகுதி, சோளாவத்தை, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்டைதீவு இலங்கை கடற்படை முகாம், மண்கும்பான் கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில அறிவியல் நகர், MAS Active, யுனிசெலா, பொறியியல் பீடம், விவ சாய பீடம், Farm House, North Gargills, Agri foods ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சிதம்பரபும், கற்குளம், ஆசிகும், ஆச்சிபுரம், எல்லப்பர் மருதங்குளம், கூமரசங் குளம், குடாகச்சகொடிய, மகாமயிலங்குளம், துட்டுவாகை குடாகச்ச் கொடியகல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சங்கானை வை.எம்.ஏச்.ஏயை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது ஜி.பி.எஸ்







மாதகல் விநாயகர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஜி.பி.எஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. 64 அணிகள் கலந்து கொண்ட இச்சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் ஜி.பி.எஸ். அணியை எதிர்த்து சங்கானை வை.எம். எச்.ஏ. அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை வை.எம்.எச்.ஏ. அணி 11 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளும் இழந்து 43 ஓட்டங்கள் பெற்றுக்கொண்டது. பந்து வீச்சில் ஜி.பி.எஸ். அணியின் ஷாருகாந், கிருபா ஆகியோர் தலா 3 பந்துகளை வீழ்த்தினர்.

44 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஜி.பி.எஸ். அணி ஆரம்பத்தில் ஓட்டங்களைப்பெற தடுமாறினாலும்பிரசாத்மற்றும்ஷாருகாந்தின் நிதானமான துடுப்பாட்டத்தால் 9 ஓவர்கள் நிறைவில் வெற்றி இலக்கை அடைந்து சம்பியன் பட்டத்தை வென்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக வெற்றிக்கு பங்காற்றிய தாருஹாசன், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக் கிருபாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# பளு தூக்கல் போட்டி ஆஷிகாவுக்கு தங்கம்



கொழும்பு றோயல் கல்லூரியில் இம் மாதம் 24,25 ஆம் திகதிகளில் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கும் போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆஷிகா 63 kg பிரிவில் 170 kg நிறையினை தூக்கி தங்கப்பதக்கம் பெற்றதுடன் சிறந்த வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டார். (க)

# மாவட்ட இளைஞர் விளையாட்டு கபடியில் தெல்லிப்பழை வெற்றி





மாவட்ட இளைஞர் விளையாட்டுவிழாவில் கபடிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக பெண்கள் அணி சம்பியன்பட்டத்தை வென்றது.

மாவட்ட மட்ட இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப்போட்டிகள் கடந்த 26 ஆம் திகதி நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் பெண்களுக்கான போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவு அணி சம்பியனாகவும், ஆண்களுக்கான போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. (க)

# மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா கயிறிழுத்தலில் தெல்லிப்பழை வெற்றி





மாவட்ட இளைஞர் விளையாட்டு விழாவில் கயிறிழுத்தல் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவு ஆண், பெண் இரு அணிகளும் சம்பியன்பட்டத்தை வென்றன.

மாவட்ட மட்ட இளைஞர் விளையாட்டுப்போட்டிகள் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது. இப்போட்டியில் ஆண், பெண் இருபாலாருக்குமான கயிறிழுத்தல் போட்டிகளில் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவு ஆண், பெண் இரு அணிகளும் மாவட்ட சம்பியன்களாக வெற்றி வாகை சூடியுள்ளன. (க)

# யாழ்.கல்வி வலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு







யாழ்.கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டி கடந்த 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து சிறப்பித்தார். இப் போட்டி நிகழ்வில் யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட ஆயிரத்து முந்நூறு ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பங்கு கொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டினர். போட்டி முடிவுகளின் படி ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தைப் பெறும் குழுக்கள் மாகாண மட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்த வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தனது உரையில் அனைவரும் பரீட்சையை மையப்படுத்திய கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் போன்று இணைபாட விதானச் செயற்பாடுகளுக்கும் வழங்க வேண்டும். அப்போது தான் ஒழுக்க விழுமியங்களையும் சம நிலை ஆளுமையையும் கொண்ட உயர்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். அந்த வகையில் இந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வானது சிறப்பிற்குரியதாகும். மாணவனின் உடல், உள, ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்பும் விதத்திலே இவ்விளையாட்டுக்கள் அமைந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (க)

## புலனாய்வாளர்கள்...

வடமராட்சி கிழக்கு, தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்று கடற்பரப்பில் புத்தளம் மற்றும் உடப்பு பகுதிகளில் இருந்து சிங்கள மீனவர்கள் நூற்றுக்கணக்கான வாடிகளை அமைத்து கடலட்டை பிடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடமராட்சி கிழக்கு மீனவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நேற்றுமுன்தினம் மேற்கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தை நடத்தியவர்களில் பலருக்கு தொலைபேசி மூலமாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வெள்ளை வானில் ஏத்துவம், 4-ம் மாடி பார்க்க ஆசையாக இருக்கிறதா என்று அச்சுறுத்தலை கடற்படையின் புலனாய்வாளர்களால் விடுக்கப்படுவதாக நேற்று மருதங்கேணி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார். குறித்த கடலட்டை வாடி தொடர்பான முடிவுகள் ஏதும் எட்டப்படாது கலந்துரையாடல் நிறைவு பெற்றது. எதிர்வரும் 1-ம் திகதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கலந்துரையாடலில் முடிவுகள் எட்டப்படும் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர். தவறினால் மாபெரும் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## கல்வி அமைச்சர்...

கரவாத விசாரணைப் பிரிவினர் தேடி அலைந்துள்ளனர். அவர்கள் மாகாண கல்வி அமைச்சர் க.பரமேஸ்வரன் என்ற பெயரிலான அழைப்புத் துண்டு ஒன்றை கொண்டு கல்வி அமைச்சரின் அலுவலகத்துக்குச் சென்றுள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள குற்றத்தடுப்புப் பிரிவின் 4-ம் மாடியில் அமைந்துள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சரை விசாரணை ஒன்றுக்கு சமுகமளிக்க அழைப்புவிடுக்கவே அவரை தேடி பொலிஸார் அலைந்துள்ளனர்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அலுவலகத்துக்கு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை பயங்கரவாத விசாரணைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் இருவர் வருகை தந்துள்ளனர்.

அவர்கள் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் க.பரமேஸ்வரனை எதிர்வரும் மாதம் 5ஆம் திகதி கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு விசாரணைக்கு வருகை தர அழைக்கும் அழைப்பாணையுடன் வந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனினும் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் க.பரமேஸ்வரன் என எவருமில்லையென தெரிவித்த அமைச்சின் அதிகாரிகள், மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி.க.சர்வேஸ்வரனை சந்திக்க அவர்களிற்கு அனுமதித்துள்ளனர்.

எவரது ஒப்பமும் அற்ற வெறுமனே கைகளால் எழுதப்பட்டு யாரால் எழுதப்பட்டது அல்லது யாருக்கு எழுதப்பட்டதென்ற எந்தவொரு தகவலுமற்றதாக போட்டோபிரதி எடுக்கப்பட்ட ஆவணமொன்றை கையளித்த அவர்கள் விசாரணையொன்றிற்காக கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி.க.சர்வேஸ்வரனை கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு விசாரணைக்கு வருகை தர அழைப்புவிடுத்திருந்தனர்.

எனினும் மொட்டைக்கடிதப்பாணியில் அமைந்திருந்த குறித்த கடிதத்தை ஏற்க மறுத்த அவர், எதிர்வரும் ஜீன் 5-ம் திகதி முதல் 14-ம் திகதி வரை ஏற்கெனவே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் தனக்கு அவ்வாறு சமுகமளிக்க நேரமில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி அமைச்சரிடமே மொட்டைக்கடித அழைப்பாணையுடன் வருகை தரும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் சாதாரண பொதுமக்களுடன் எவ்வாறு கையாளுவர் என்பது குறித்து தனக்கு சந்தேகமிருப்பதாக கலாநிதி.க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் இப்பிரிவினர் சட்டரீதியாக உத்தியோகபூர்வமாக கடிதங்களை கையாளாது மொட்டைக்கடித பாணியில் அனுப்பிவைப்பதும் எதற்காகவெனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் மாகாண சபைக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறு அழைப்பு விடுத்த குற்றச்சாட்டில் வடக்கு கல்வி அமைச்சரிடம் விசாரணை நடத்தப்படும் என அரச உயர்மட்டம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## ஜூலை 2 இல் அரச...

அரச சேவையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சு அறிவித்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் சுமார் 57 ஆயிரம் பேருக்கும் ஒரே தடவையில் அரச சேவைக்குள் இணைக்கப்படவேண்டும் என வலியுறுத்தி பட்டதாரிகள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த நிலையில் அரசு தனது தீர்மானத்தில் உறுதியாக உள்ளது.

ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி முதல் மே மாதம் 5ஆம் திகதி வரை 25 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன. அதில் சுமார் 57 ஆயிரம் பட்டதாரிகள் சமுகமளித்தனர்.

இதன் இறுதி பெறுபேறுகள் அமைச்சுக்கு கிடைத்தன. கோரப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் 20 ஆயிரம் பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று அமைச்சின் மேலதிக செயலாளர் அசங்க தயாரத்ன கூறினார். (ம)

## போராளிகள் கட்சியின்...

ச்சியாக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மாவீரர் தின கொண்டாட்டம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், ஜனநாயக போராளிகள் கட்சியின் செயற்பாடு ஆகியன குறித்து பல கேள்விகளையும் கேட்டதுடன் இவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.

மாவீரர் தினத்தை ஜனநாயக போராளிகள் கட்சி எங்கெல்லாம் கொண்டாடியது? முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கொண்டாடுவது ஏன்? என்று முக்கியமாக கேட்டு உள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் உயிர் இழந்த உறவுகளை நினைவு கூருவதற்காகவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவதாக வேந்தன் குறிப்பிட்டதுடன் முன்னாள் போராளிகளை ஒன்றிணைத்து ஜனநாயக அரசியலை முன்னெடுப்பதே ஜனநாயக போராளிகள் கட்சியின் நோக்கமாகும் என்றும் கூறியிருந்தார். இவர் பூசா, வெலிக்கடை ஆகியவற்றில் இரு வருடங்களுக்கு மேல் தடுப்பில் வைக்கப்பட்டு, புனர்வாழ்வு வழங்கப்பட்டு, சமுதாயத்தில் கலந்து வாழ விடுவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## சட்டவிரோத...

ள்ளது.

இந்த தகவல்களின்படி, கிழக்கில் 10 பேரும், வடக்கில் 17 பேரும், கடந்த சில தினங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் கடற்தொழிலுக்காக பயன்படுத்திய பொருட்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ம)

## மகிந்த-ரணில் எதிர்ப்பு...

நடைபெறவுள்ளது. அதன்போதே குறித்த தீர்மானம் எடுக்கப்படும்.

மேலும் குறித்த அணி கடந்த 23ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது. அச் சந்திப்பைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதனை இலக்காகக்கொண்டு போராட்டங்களை நடத்தவுள்ளதாகவும் அப் போராட்டங்கள் சிலவற்றை கூட்டு எதிர்க் கட்சியுடன் இணைந்தும் மற்றும் சிலவற்றை தனியாகவும் நடத்தவுள்ளதாகவும் அந்த அணி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மைத்திரி-ரணில் கூட்டு...

க்கும் குழப்பமான ஆட்சியில் ஊடகங்களும் அச்சுறுத்தப்படுகின்றன. அவை சுதந்திரமாக தமது செய்திகளை வெளியிட முடியாத நிலைமைகள் காணப்படுகின்றன.

செய்தி சேகரிக்கும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதுடன், அவர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுவதுடன், அவர்களுக்கான பாதுகாப்பும் இந்த அரசாங்கத்தில் இல்லை.

இது இந்த அரசாங்கத்தின் திட்டமிட்ட சதிச் செயலாகும். தமது ஆட்சியில் இடம்பெறும் ஊழல்கள் மற்றும் நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் செய்திகள் வெளிவராமல் தடுப்பதற்காகவே இவ்வாறு அரசாங்கம்

# பேருந்து மீது மரம் விழுந்ததில் பெண் ஒருவர் பலி

(பதுளை)

பதுளை நோக்கி சென்றுகொண்டிருந்த பேருந்தின் மீது மரம் முறிந்து விழுந்ததில் பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி சென்று கொண்டிருந்த பேருந்தின் மீது தியத்தலாவை பகுதியில் மரம் ஒன்று முறிந்து விழுந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக 24 வயது பெண்ணொருவர் பலத்த காயங்களிற்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்துள்ளார்.

இதேவேளை இந்த சம்பவத்தில் சிக்கி மற்றொரு நபர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன் தரமற்றவை எனக் கூறி மீள் ஏற்றுமதி

(கொழும்பு)

ரூபா 388 மில்லியன் பெறுமதியான ஓர் இலட்சத்து 37 ஆயிரம் கிலோ கிராம் ரின் மீன் இறக்குமதி செய்யப்பட்டு தரமற்றது என மீள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓர் இலட்சத்து 37 ஆயிரம் கிலோ கிராம் எடையுடைய ரின் மீன் 74 கொள்கலன்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. அதன் பெறுமதி ரூபா 388 மில்லியன்களாகும்.

சுங்கத் திணைக்களத்தில் வைத்து முழுவதும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. எனினும் இலங்கையில் அதனை உணவுத் தேவைக்கு பயன்படுத்த முடியாது என சான்றிதழ் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் ரின் மீன் முழுவதும் நேற்று இறக்குமதி செய்த நாடுகளுக்கே மீள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

செயற்படுகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## தொடர்ச்சியாக வெளிவரும்...

ராஜா முன்னிலையில் அகழ்வு பணிகள் ஆரம்பமான நிலையில் இரவு 7 மணியளவில் குறித்த அகழ்வு பணிகள் நிறைவடைந்துள்ளன. "லங்கா சதொச" விற்பனை நிலைய வளாகம் மற்றும், மன்னார் பொது மயானத்திற்கு பின் பகுதியில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த மண் ஆகியவற்றில் இரண்டாவது நாளாக நேற்றைய தினம் ஒரே நேரத்தில் இரு அகழ்வு பணிகள் ஆரம்பமானது. எனினும் "லங்கா சதொச" விற்பனை நிலைய வளாகத்தில காலை முதல் இரவு வரை முழுமையான அகழ்வுகள் இடம் பெற்றன.

மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் ஆரம்பமான குறித்த அகழ்வு பணியின் போது விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர், களனி பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான குழுவினர், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் சார்பாக சட்டத்தரணிகளான வி.எஸ்.நிறைஞ்சன், திருமதி ரனித்தா ஞானராஜ் , விசேட தடவியல் நிபுணத்துவ பொலிஸார் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்களங்களான வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மன்னார் நகரசபை, நில அளவைத்திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் பிரதி நிதிகள், தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த வளாகத்தில் அகழ்வு பணிகள் இடம் பெற்ற போது நில மட்டத்தில் இருந்து சுமார் 7 அடி ஆழத்தில் மனித எச்சங்கள் பரவலாக காணப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் விசேட குழுவினர் தமது அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட போது மனித எச்சங்கள் என சந்தேகிக்கும் பல்வேறு எலும்புத்துண்டுகள் மீட்கப்பட்டுள்ளதோடு, பிஸ்கட் பக்கற்றின் பொலித்தீன் பை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. குறித்த பொலித்தீன் பையில் அதன் உற்பத்தி திகதி கண்டு பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் தொடர்ச்சியாக பல்வேறு மனித எலும்புத்துண்டுகள், பற்கள் என மீட்கப்பட்டுள்ளது. இரவு 7 மணியளவில் குறித்த அகழ்வு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது.

மீண்டும் இன்று புதன்கிழமை காலை குறித்த இரு இடங்களிலும் நீதவான் முன்னிலையில் அகழ்வு பணிகள் இடம்பெறவுள்ளது.

குறித்த இரு இடங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜனாதிபதி, பிரதமர்...

கடவத்தை பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற "கமே பன்சல கமட சவிய" என்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கூறுகையில்,

திருடர்களை பிடிப்போம் என்று ஜனாதிபதியும், பிரதமரும் கொடுத்த வாக்குறுதி இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. மக்கள் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அதிகாரத்தை வழங்கினார்கள், காரணம் திருடர்களை பிடிக்கவே.

ஆனால் அதை இன்னும் ஜனாதிபதியும், பிரதமரும் நிறைவேற்றவில்லை. இதனால் அதிகாரம் வழங்கப்பட்டமை நாட்டுக்கு துரதிர்ஷ்டமே. அதனால்தான் இன்று திருடர்கள் வீரர்களாகவும், வீரர்கள் திருடர்களாகவும் உள்ளனர்.

கடந்த அரசாங்கத்தில் இலஞ்ச ஊழலில் ஈடுபட்டவர்கள் இன்று சுதந்திரமாக உள்ளனர். மூன்றரை வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் எம்மால் இன்னும் கடந்த கால திருடர்களை பிடிக்க முடியாமல் உள்ளது.

ஒரு பக்கம் கவலையாக இருந்தாலும் மறுபக்கம் மகிழ்ச்சியாக உள்ளது. காரணம் தற்போதைய அரசாங்கத்தில் உள்ள திருடர்களையாவது பிடிக்க முடிந்தமை.

குறிப்பாக அர்ஜுன அலோசியஸ்சிடம் பணம் பெற்ற 118 பேரின் பெயர்களை கட்டாயமாக மக்கள் முன் வெளிக்கொண்டு வர வேண்டும். உண்மையில் கூச்சல் போட்ட சிலரின் உண்மையான முகம் தற்போது வெளிவந்துள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், 20ஆவது திருத்தம் பற்றி தற்போது சரியான முடிவை எடுக்க முடியாது. ஆனால் நாட்டுக்கு முக்கியம் நாட்டு மக்கள் விரும்பும் அரசியலமைப்பேயாகும்.

நான் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமைக்கு எதிரானவன் அல்ல. ஆனால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையில் சாதகங்களும் உண்டு பாதகங்களும் உண்டு.

அந்த பதவியில் அமருபவர் தமது அதிகாரங்களை தவறாகவும் பயன்படுத்தலாம் அல்லது சரியான முறையிலும் அமுல்படுத்தலாம். ஆகவே அது நபரை பொருத்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தீயதா? நல்லதா? என குறிப்பிட்டு கூறமுடியாது. நாட்டின் பாதுகாப்புக்கு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையே மிக அவசியமாகும் என தெரிவித்துள்ளார். (ம)

## பதவி வெற்றிடங்கள்

**O/L,A/L படித்தவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு...**

யாழ் மண்ணில் ஒரு தசாப்தகாலமாக வெற்றிகரமாக இயங்கிவரும் D.N.M.Cஇன் வடக்கு மற்றும் கிழக்கில் திறக்கப்படவிருக்கும் புதிய கிளைகளுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

(சி-2765)

- வயதெல்லை 18-30
- தகுதிக்கேற்ப சிறந்த வருமானம்

தொடர்புகளுக்கு **0766668385**

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(சி-2744)

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress

## FLC FRENCH LANGUAGE CENTRE



# பிரெஞ்சு

V. ஜெகன் (Trained in France- 2007)
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட Diplomas.

40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 09..06.18 சனி காலை 10 மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :11.06.18 மாலை 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## Win repair



- சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும்,A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு:- 0779648942

## A/L 2020

அனைத்து பிரிவு மாணவர்களுக்குமான

சித்திரம் - பிரபல ஆசிரியர் ஜெயந்தன்

Part-I, Part-II, Part-III, Theory மற்றும் Practical

புவியியல் ஜெனகன் (யாழ் இந்துக் கல்லூரி)

ஊடகக்கல்வி கோணேஸ் (JMC)

(C-2768)

சனி, ஞாயிறு தினங்களில் மாத்திரம்

A/L 2020 - 02.06.2018

**077 017 5346**


**Techno World**

## DMI இன் புதிய செயற்றிட்டம்

A/L தொழில்நுட்ப பிரிவிற்கு

- # தனி இடம்
- # நவீன ஆய்வுகூடம்
- # கருத்தரங்கு மண்டபம்

வசதிகளுடன் தனி இடத்தில் வெகுவிரைவில்




(சி-2764)

## டிப்பர் - முச்சக்கரவண்டி...

வண்டியின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி -பரந்தன் -முல்லைத்தீவு ஏ35 வீதியின் சுண்டிக்குளம் சந்திக்கு அண்மித்த பகுதியில் புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியை பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பை நோக்கி வேகமாகப் பயணித்த டிப்பர் வாகனம் முன்னே சென்ற வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டசமயம் குறித்த விபத்து இடம்பெற்றதுடன், பின்னால் வந்த வாகனம் டிப்பர் வாகனத்துடன் மோதியுள்ளது.

நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன் இவரது உடலம் நீண்ட நேரத்தின் பின்னரே அயலவர்களால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதுடன் இது தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-15-312-315)

## விற்பனைக்கு

மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை (4225) தொடர்புகளுக்கு 077 357 3055

## விற்பனைக்கு

வடமராட்சி மந்திகை குரும்பசட்டி வயிரவர் கோயிலுக்கு அண்மையில் 5 அறைகள் கொண்ட 3 1/2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- **077 843 5453** (சி-2763)

## வேலைவாய்ப்பு

| பெண்கள் | ஆண்கள் |
| --- | --- |
| Accountant | Stock Keeper |
| Administration | Distributor |
| Clerk | Supervisor |

தகைமை:- O/L அல்லது A/L படித்தவர்கள்

No.179, Hospital Rd, Jaffna எனும் முகவரிக்கு உங்களுடைய சுயவிபரக்கோவையை அனுப்பி வைக்கவும். அல்லது நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளவும். (4240)

விண்ணப்ப முடிவுத்திகதி -05.06.2018

தொடர்புகளுக்கு:- 077 5179034, 077 9858580

5 நட்சத்திர விருது வென்ற இலங்கையின் முதற்தர வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

Emerald Isle Manpower & Travel Services — The Sri Lankan Recruitment Specialists

### வடக்கில் முதல் தடவையாக வழங்கும் வேலைவாய்ப்புக்கள்

| | | |
| --- | --- | --- |
| இலவச விசா | தொழில்நுட்பவியலாளர் எலெக்ட்ரிசியன், பிளம்பர், மெக்கானிக். | 94,600/- |
| ஓமான் பாஃரேன் | தாதியர் மிட்வைஃப், பராமரிப்பாளர், ஆய்வுகூட பரிசோதகர் | 165,400/- |
| கட்டார் | சாரதிகள் மோட்டார் சைக்கிள், மென்ரக, கனரக வாகனங்கள் | 49,200/- தொடக்கம் 82,000/- |
| குவைத் | ஹோட்டல் பணியாளர்கள் Dish Washer, Waiter, Manager, Kitchen Helper, Commi, Chef. | 67,990/- தொடக்கம் 287,650/- + சேவைக் கட்டணம் |

விபரங்களுக்கு 077 00 38 215, 077 55 46 956

9வது ஆண்டில் 9th Year

SIKARAM ACADEMY Business - Hospitality - English

FAST TRACK to CAREERS

Sri Lankan Entrepreneur of the Year 2017

(C-2723)

இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 221 9 221 www.sikaram.lk

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அன்னா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி 021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



| | |
| --- | --- |
| UK - 550 | /=Kg |
| கனடா - 900 | /=Kg |
| ஜேர்மனி - 700 | /=Kg |
| நெதர்லாந்து - 700 | /=Kg |

DELIVERY IN 3-5 DAYS (C-2657)

0768226240

- மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS

## எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

### வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை

# அருள்

- அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
- அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.

சாவகச்சேரி: இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

நெல்லியடி: இல. 01 பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

கிளிநொச்சி: இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்) 076 443 1576

(சி-2797)

## வீடு / காணி விற்பனைக்கு

HARI REAL ESTATE

- வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்தில் 32 பரப்பிலமைந்த விசாலமான கோழி வளர்ப்புக்கு பொருத்தமான பண்ணை, அனைத்து அடிப்படை கட்டுமான வசதிகள் மற்றும் ஏனைய இயற்கை வளங்களுடன் விற்பனைக்குண்டு. உடனடி வருமானத்திற்கேற்றது.
- மல்லாகம் மத்தி (GS ஒழுங்கை) கே.கே.எஸ். வீதியிலிருந்து 140 Mtr உட்புறத்தில் புதிய வீட்டுடன் 02பரப்பு காணி சகல வசதிகளுடன் விற்பனைக்கு (இணைந்த குளியலறை, நன்னீர் மற்றும் இயற்கை வளங்கள் )
- ஏழாலை மேற்கு ...யில் ஒழுங்கை (கட்டுவன் வீதிக்கு மிக அருகில்) 08 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்குண்டு.
- வவுனியா தெற்கு கருவேப்பங்குளம் - சாந்தசோலை வீதியுடன் இணைந்த 08 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி மிக நிறைந்த பயன்தரு வளங்கள் மற்றும் வற்றாத நீரூற்றுள்ள கிணற்றுடன் விற்பனைக்குண்டு (120 ற்கும் மேற்பட்ட தென்னை, பலா, வாழை...)
- புத்தூர் மேற்கு பருத்தித்துறை வீதிக்கு மிக அருகில் (தபால் கந்தோர் வீதி) 14 பரப்பு காணி பனை மரங்களுடன் விற்பனைக்குண்டு.
- தெல்லிப்பளை கட்டுவன் பிரதான வீதியுடன் 31 பரப்பு விசாலமுடைய வெற்றுக்காணி (துரித உட்கட்டுமான அபிவிருத்தியடைந்துவரும் பிரதேசம்) விற்பனைக்குண்டு....

அனைத்தும் சிறந்த விலைப்பெறுமதிகளில்

தரகர்கள் தேவையில்லை

'ஹரி றியல் எஸ்டேட்'

இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி +94 021 221 4422
மொபைல் + 94 70 300 4000
முகநூல் harirealestate.lk

POWERED BY HARI ENGINEERING AND CONTRACTORS (PVT) LTD

## தேசிய கல்வியற்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய மாணவர்களே...!

உங்களுக்குரிய



BOTTOM, T.SHIRT
SHOES, SOCKS
CAP



என்பவற்றை ஓரே இடத்தில் பெற்றுக்கொள்ள

# ஒலிம்பியா ஸ்போட்ஸ்

இல 273, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

T.P :- 021 222 3490, 077 384 7842

(4241)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.